பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 01 வியாழக்கிழமை 15.07.2021 கதிர் 252

### இது ரகசியம் அல்ல!

வடக்கு மாகாண அரச நிர்வாக அதிகாரிகள், பிரதிநிதிகள் குறித்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திடீர்ச் செய்தி ஊடகங்களில் மாறி மாறி வருகின்றது. அவர் போகின்றார், இவர் வருகின்றார், அவருக்கு இடமாற்றம், இவர் தூக்கப்படுகின்றார் பக்கம்02 »

## 1,540 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் நேற்று 1,540 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் ☞2

## தொழிற்சங்கத் தலைவர்களை விடுவிக்கக்கோரி தலைநகரில் நேற்று மாபெரும் வாகனப் பேரணி

முல்லைத்தீவு இராணுவ முகாமில் கட்டாயத் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி கொழும்பில் நேற்று வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரச தாதியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தப் பேரணியை நடத்தின.

கொழும்புதாமரைத்தடாக மண்டபத்துக்கு அருகில் இருந்து புறக்கோட்டை வரையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டதுடன், ☞2



# வல்லை ஆதிகோயிலடியில் 48 பேருக்குக் கொரோனா!

## வடமராட்சியில் பெரும் கொத்தணி அபாயம்

(வடமராட்சி நிருபர்)

**யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நேற்று 39 பேர் உட்பட கடந்த இரண்டு நாள்களில் 48 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

**வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் எழுமாற்றாக 156 பேரிடம் நேற்று பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் 29 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.** ☞11

## யாழ்.மாவட்டத்தில் 99 பேர் உட்பட வடக்கில் 111 பேருக்குத் தொற்று

வடக்கு மாகாணத்தில் 111 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம், யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 99 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ☞2

## கொரோனாத் தொற்றால் மேலும் 37 பேர் உயிரிழப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணித்த 37 பேரில் 18 ஆண்களும், 19 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 611 ஆக அதிகரித்துள்ளது.

## கடலட்டைப் பண்ணை விடயத்தில் வெளிப்படையான பகல் கொள்ளை

### டக்ளஸுக்கு சிறிதரன் பதிலடி

(இ.கலையமுதன்)

கடலட்டைப் பண்ணை விடயத்தில் வெளிப்படையான பகல் கொள்ளைநடந்துள்ளது. அமைச்சரோடு சேர்ந்தவர்களும் இதற்கு உடந்தையாக இருக்கின்றனர். தாங்கள் நேர்மையாக நடந்தோம்; இதில் எந்தவிதமான கையூட்டலும் நடக்கவில்லை என்றால் நேர்மையாக இதனை வெளிப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அவர் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்றொழில் அமைச்சினுடைய நேரடிக் கண்காணிப்பில் அமைச்சின் தவறான செயற்பாடுகள் ஊடாக சீன நாட்டவர்களுக்கு கடலட்டை பண்ணைகளை வழங்குகின்ற செயல்திட்டங்கள் ☞2

## படுவீழ்ச்சியில் பொருளாதாரம்; அரசிடம் மாற்றுவழியே இல்லை

### சர்வதேச நாணய நிதியத்துடன் பேசுமாறு ரணில் வலியுறுத்து



நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணத்தைத் தேடுவதற்கு அரசிடம் மாற்று வழிகள் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

நாட்டுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்ய பணம் இல்லாத காரணத்தினாலேயே அரசு இறக்குமதி ☞2

## மூன்று எறிகணைகள் தென்மராட்சியில் மீட்பு



(சாவகச்சேரி நிருபர்)

யாழ்., தென்மராட்சிப் பகுதியில் சரசாலை - பருத்தித்துறை வீதியில் இடம்பெற்று வருகின்ற வீதி அபிவிருத்திப் பணியின் போது நேற்றுப் பிற்பகல் மூன்று எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

வீதி அகலிப்புப் பணியின் போது குறித்த 122 மில்லிமீற்றர் அளவுடைய மூன்று எறிகணைகள் இனங்காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ☞2

## யாழில் மேலும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நவாலியைச் சேர்ந்த 42 வயதுடைய ஆண் நேற்று உயிரிழந்துள்ளார். ☞2

## செப்டெம்பர் மாதத்துக்குள் நாடு முழுமையாகத் திறப்பு

### இராணுவத் தளபதி நம்பிக்கை



பெரும்பாலும் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் நாடு முழுமையாகத் திறக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

– இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

வடக்கு மாகாண ஆளுநர் மாற்றப்படுகின்றார், அவர் வருகின்றார், இவர் வருகின்றார் எனக் கயிறு விட்ட ஊடகங்கள் சில என் பெயரையும் கோர்த்து விட்டு நாடகம் நடத்தவும் கூடத் தவறவில்லை. இதோ இரண்டு மணி நேரத்தில் நியமனக் கடிதம் கொடுக்கப் போகின்றார்கள் என்று இணையத் தொலைக்காட்சி ஒன்று அறிவிக்கவும் கூடச் செய்தது. கேட்கச் சிரிப்பாகவும் இருந்தது.

வடக்கு மாகாண ஆளுநர் உட்பட சில மாகாண ஆளுநர்களை மாற்றும் எண்ணம் அரசுத் தலைமைக்கு உண்டென்பதை அறிய முடிகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு நீதித்துறையில் உயர் பதவி வகித்த தமிழர் ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டு, அவரின் விருப்பமும் சில தினங்களுக்கு முன்னர் கேட்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அவர் மென்மையாக அந்த அழைப்பை மறுத்து விட்டார். தமது ஓய்வு காலத்தை சிக்கலில் மாட்டுவிக்க அவர் விரும்பவில்லைப் போலும்.

ஆனாலும் வடக்கு மாகாண ஆளுநருக்கு உடனடி மாற்றம் இல்லை என்றே இப்போது தோன்றுகின்றது.

ஜெனிவா அடுத்த அமர்வுக்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. அது இம்முறை கொழும்பு அரசுக்கு நெருப்பாற்றைக் கடக்கும் விவகாரமாக இருக்கும். அதற்கு முன்னர் தமிழர் தரப்புடன் ஒரு சமரசத்தை ஆரம்பித்து சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றிக் காலத்தை இழுத்தடிக்கும் திட்டம் கோட்டா தலைமையிடம் உண்டு. புதிதாகக் களத்துக்குள் தலையெடுத்திருக்கும் பஸிலை முன்னிறுத்தி இந்தக் காய்நகர்த்தல்கள் நடக்கலாம். அப்படி நடக்கும் போது, அந்தப் புதிய உறவுக்கு வலுச் சேர்க்கும் விதத்தில் அரச நிர்வாக முறைமைகள் – பதவிகளிலும் – மாற்றம் வரக் கூடும்.

அப்போது, கோட்டா அரசுடன் சமரசம் செய்ய விழையும் தமிழர் தரப்புக்கும் பிடித்தமானவராக தற்போதைய ஆளுநர் இருப்பாராயின் அவரே பதவியில் தொடரக் கூடும். இல்லையேல் அப்போதைய அரசியல் சூழ்நிலைக்கேற்ப இரு தரப்புகளுக்கும் ஏற்ற மாற்றம் வரும்.

இதற்கிடையில் –

அமுல் பேபிக்கும், அரச நிர்வாகத்தை வடக்கில் நேர் சீராக்க முனையும் தரப்புகளுக்கும் இடையில், மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன் போல எல்லா விடயங்களையும் போட்டுக் குழப்பியடிக்கும் யாழ். அரச அதிபர் குறித்தும் மேலிடத்துக்கு கடந்த ஓரிரு நாள்களாகச் செல்லும் அறிக்கைகள் அவ்வளவு நல்லனவாகத் தெரியவில்லை.

தெரிவான வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியலை பகிரங்கப் பார்வைக்கு வைத்துத் திருத்தங்கள், முறைப்பாடுகள், ஆட்சேபங்கள் இருந்தால் விண்ணப்பியுங்கள் என்று அறிவித்த அரச அதிபர், திடீரென ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் வந்தாலும் போட்ட பட்டியலை மாற்றவே மாட்டோம் என்று முன்னுக்குப் பின் முரணாகக் கதை விடுகின்றார்.

இவை எல்லாம் தமது கதிரைக்கு அவர் தாமே ஆப்பு வைக்கும் வேலைகள்.

வடக்கு மாகாண நிர்வாகத்தில் மாகாண பிரதம செயலாளர் பதவி மிக முக்கியமானது.

அந்தப் பதவியில் இருந்த பத்திநாதர் ஓய்வுபெற்றுச் சென்று பத்து நாள்கள் தாண்டி விட்டன. இன்னும் பொருத்தமானவர் தெரிவு செய்யப்படவுமில்லை. நியமிக்கப்படவுமில்லை. விடயம் இழுபடுகின்றது.

வடக்கு மாகாணத்தில் நிர்வாக சேவை விசேட தரத்தில் பன்னிரு அதிகாரிகள் உள்ளனர். ஆனால் வடக்கின் ஐந்து மாவட்டங்களில் மூன்றுக்கு வடக்கிற்கு வெளியேயுள்ள மாவட்டங்களைச் சேர்ந்தோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் இப்பதவிக்கு நியமிக்கப்படக் கூடிய தகைமைகளுடன் பன்னிருவர் இருக்கின்றபோது வடக்குக்கு வெளியேயுள்ள மாகாணத்திலிருந்து ஒருவரை அழைத்து வந்து வடக்கு மாகாணப் பிரதம செயலாளராக நியமித்தால் என்னவென்று அரசு கருதுவதாகவும் கூடத் தெரிகின்றது.

ஏனைய மாவட்டங்களில் வடக்கு மாகாண நிர்வாக அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்திய காலம் ஒன்று இருந்தது. இப்போது வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இங்கு வந்து ஆதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

அது, இங்குள்ள அதிகாரிகள் தரத்தில் சேவையாற்றும் நம்மவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் விசனத்தையும் அளித்து வருவதாகத் தகவல் உண்டு.

★ ★ ★

கோட்டா அரசுக்கு அவ்வப்போது சில 'குளிசை'களைக் கொடுக்கும் தன் பண்பிலிருந்து மாறமாட்டார் போலும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

இப்போது கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமி சட்ட மூலத்தை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்வோர் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரும் பலவந்தமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் அவர் சீறியிருக்கின்றார்.

*"மக்களின் சுதந்திரத்தை அடக்குவதற்கு அராஜகத்தைப் பயன்படுத்தும் பழைய அரசியல் கலாசாரம் திரும்புவதையே இது காட்டுகின்றது"* – என்று சீறியிருக்கின்றார் அவர்.

*"தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கொத்தலாவலை பாதுகாப்பு அக்கடமி சட்டமூலம் தொடர்பாக கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும்"* – என்று கூறி அரசின் வயிற்றில் புளியைக் கரைக்கவும் அவர் தவறவில்லை.

கோட்டாபயவை ஆட்சிப் பீடத்துக்குக் கொண்டு வரத் துடியாய்த் துடித்தோரே இப்போது அவருக்குக் காலையும் வாருகின்றார்கள் என்பது கவனிக்கத் தக்கது.

★ ★ ★

மூன்று, நான்கு தினங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா குறித்து நான் பதிவிட்ட சில விடயங்கள் தொடர்பில் தமது மறுப்பு ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார். அது 9 ஆம் பக்கத்தில் அப்படியே வரிக்கு வரி பிரசுரமாகியுள்ளது.

தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவரை மேற்கோள் காட்டியே அந்த மூலத் தகவலை நான் பிரசுரித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கும். மாவை சேனாதிராசாவின் விளக்கத்தில் உள்ள தகவல்களை அந்த ஊடகவியலாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். அது கிடைத்தும் – பெரும்பாலும் நாளை – என் செய்தி மூலத் தரப்பின் விளக்கத்தை வாசகர்களுக்குத் தெரிவிப்பேன்.

இப்போது வாசகர்கள் – waiting for that.!

– மின்னல் –

## கடலட்டைப் பண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதன்மை பெற்ற விடயங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக கிளிநொச்சியின் எல்லையாக இருக்கின்ற கௌதாரிமுனை கல்முனை பகுதியிலே குய்லன் என்கிற தனியார் நிறுவனம் கடலட்டை பண்ணை அமைத்து இருக்கின்றது. இதற்கான அனுமதி பிரதேச செயலாளரிடமோ கடற்றொழில் திணைக்களத்திடமோ பெற்றுக்கொண்டதாக இல்லை.

மற்றொரு நாட்டைச் சேர்ந்த குடியுரிமை இல்லாதவர்கள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க எல்லை பரப்புக்குள் அந்த சங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் வலுக்கட்டாயமாக அந்த இடங்களில் பண்ணைகளை அமைத்து அந்த இடங்களைப் பிடித்தமை என்பது காலங்காலமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற கடற்றொழிலாளர்களை இன்னமும் பாதிக்கும்.

எமது மக்களுக்கு இது தொடர்பான புதிய தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் தேவை என்பது உண்மை. அதற்கு இன்னொரு நாட்டைக் கொண்டு அதனை வழங்க வேண்டுமே தவிர, இன்னொரு நாட்டைச் சேர்ந்தவர் வந்து இந்த வளங்கள் இருக்கின்ற பிரதேசங்களில் அந்த வளத்தை சூறையாடுகின்ற வகையில் அமையக்கூடாது. நேற்றுமுன்தினம் கூட கடற்றொழில் அமைச்சர் கூறியிருக்கிறார் யாரும் வரலாம், பண்ணை அமைக்கலாம், யாரும் தடுக்க முடியாதென்று மமதையோடு பேசி இருக்கின்றார். அவருக்கு எந்தவிதமான கரிசனையும் அக்கறையும் மக்கள் மீது கிடையாது.

எமது பிரதேச மீனவர்களின் நலன் கருதி அந்த மக்களுக்கான பயிற்சிகளை வழங்கி, அவர்களுக்கான உபகரணங்களை வழங்கி, அட்டைப் பண்ணைகளை அந்த மக்கள் செய்யக்கூடிய வகையில் அந்த வேலைத் திட்டத்தை செய்திருக்க முடியும். ஆனால், நேரடியாகச் சென்று கௌதாரிமுனையை நாம் பார்த்தபோது அரியாலையிலே இருக்கின்ற அட்டை பண்ணை குஞ்சுகளை கௌதாரிமுனையில் வைத்து ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான ஒப்பந்தமும் கூட எழுதப்பட்டிருக்கின்றது. இரு தரப்பும் கையொப்பமிடாமல் சட்டத்தரணியின் கீழ் ஒப்பந்தம் செய்து வெளியிட்டுக் கொண்டதே தவிர, இதுவரை இரு தரப்புகளும் ஒப்பந்தம் செய்ய வில்லை. இது வெளிப்படையான பகல்கொள்ளை. அமைச்சரோடு சேர்ந்தவர்களும் இதற்கு உடந்தையாக இருக்கின்றனர். தாங்கள் நேர்மையாக நடந்தோம், இதில் எந்தவிதமான கையூட்டலும் நடக்கவில்லை என்றால் நேர்மையாக இதனை வெளிப்படுத்த வேண்டும்.

அரச அதிபருக்கு இது தொடர்பில் தெரியாது; பிரதேச செயலருக்கும் தெரியாது. இதை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம். அனைத்து மக்களுக்கும் சார்பான நடவடிக்கையை நாங்கள் முன்னெடுப்போம்.

இது இந்த நாட்டினுடைய, குறிப்பாக தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்களுடைய இடங்களைப் பிடித்து இன்னொருவருக்குக் கொடுப்பதாகும். மக்கள் கையேந்தி நிற்கின்ற நிலையிலே அதனை தொடர்ந்து வைத்திருப்பதற்கு அரசு முகவர்களாக இந்த அமைச்சர்களைப் பயன்படுத்துகின்றது என்பதுதான் உண்மை – என்றார்.

## மூன்று எறிகணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## செப்டெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செப்டெம்பர் மாதத்துக்குள் கொரோனாத்தடுப்பூசி பெறத் தகுதியான அனைத்து மக்களுக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

கொரோனாத் தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டவர்கள் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் நாட்டுக்குள் நுழைய அனுமதி வழங்கப்படும்.

கொரோனா வைரஸ் உருமாறி வருகின்றது. நிலைமைகள் மாறுபடுகின்றன. இந்நிலையில் அவ்வப்போது இருக்கும் நிலைமைகளில் அடிப்படையிலேயே இறுதி முடிவுகள் எடுக்கப்படும்.

தடுப்பூசி பெறத் தகுதியுடைய அனைவருக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் போடும் பணிகள் நிறைவு பெற்றால் நாட்டை முழுவதுமாக மீண்டும் திறப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் – என்றார்.

## யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா மாவட்டத்தில் 04 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 05 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும், கிளிநொச்சி முள்ளியான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 1, 540 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 79 ஆயிரத்து 59 ஆக எகிறியுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 48 ஆயிரத்து 524 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் 26 ஆயிரத்து 924 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரின் சடலம் சுகாதார விதிமுறைகளுக்கமைய தகனம் செய்யப்பட்டது.

## தொழிற்சங்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

பல்வேறு வாகனங்களில் பதாகைகளைக் காட்சிப்படுத்திவாறு இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்...)

## படுவீழ்ச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உரத்தை இறக்குமதி செய்ய பணம் இல்லாத காரணத்தினால் சேதன உரத்தைப் பயன்படுத்துமாறு அரசு விவசாயிகளுக்குக் கூறி வருகின்றது.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கியுள்ளது. 400 கோடி டொலரே கையிருப்பில் இருக்கின்றது.

இலங்கை இவ்வருடத்தில் பிணைமுறி கடனாக 100 கோடி டொலரைச் செலுத்த வேண்டியுள்ளது. அதனைத் தொடர்ந்து கையிருப்பு 300 கோடி டொலர் வரை குறைவடையும்.

நாட்டின் வர்த்தக வங்கிகளிலும் டொலர் கையிருப்பு இல்லை. வங்கிகள் கடனில் உள்ளன.

டொலரைச் செலுத்த முடியாத காரணத்தால் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த எரிபொருள் கப்பலொன்று நங்கூரமிடப்பட்டுள்ளது. டொலரைச் செலுத்தாவிட்டால் எரிபொருள் கிடைக்காது.

சர்வதேச நாணய நிதியம் உறுப்பு நாடுகளுக்கு 6 ஆயிரத்து 500 கோடி டொலரை பகிர்ந்தளிக்கத் தீர்மானித்துள்ளது. அதன்மூலம் இலங்கைக்கு 80 கோடி டொலர் கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணத்தைத் தேடுவதற்கு அரசிடம் மாற்று வழிகள் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பைப் பேணி, தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் சான்றிதழ் இலங்கைக்குக் கிடைக்குமாக இருந்தால் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தப் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தால் அடுத்த வருட நடுப்பகுதியில் தொழில்வாய்ப்பின்மை, உணவுத் தட்டுப்பாடு போன்றன ஏற்படலாம் – என்றுள்ளது.

# ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்குக

## அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் காட்டம்

**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,ஜூலை 15

ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பு செய்வதுடன் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை வாபஸ் பெறவேண்டுமென சமூக விஞ்ஞான ஆய்வு மைய இணைப்பாளரும் அரசியல் ஆய்வாளருமான சி.அ.ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (புதன்கிழமை) அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்காக ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 19 ஆசிரியர்கள் முல்லைத்தீவு கோப்பாப்புலவு விமானப்படைத்தள தனிமைப்படுத்தல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது அடிப்படை உரிமை மீறலாக இருப்பதால் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆளுங்கட்சி நிகழ்வுகளில் சுகாதார விதிமுறைகளை மீறி பலர் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் எவரும் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. சுகாதார விதிமுறைகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கு மாற்றுடைகள் வழங்குவதற்குக் கூட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. எந்தத் தனிமைப்படுத்தல் முகாம்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றோம் என்பது தெரியப்படுத்தப்படவில்லை. முகாமுக்கு வரும் வரை போதுமான உணவு வகைகளும் வழங்கப்படவில்லை.

முகாமில் மாற்றுடைகள் இல்லாததால் படுக்கை விரிப்புக்களையே மாற்றுடைகளாக அணிய வேண்டிய நிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டது. இந்த மோசமான புறக்கணிப்புக்களையும் வன்மையாகக் கண்டிக்கி



றோம்.

மாற்றுடைகள் இல்லாமல் குறிப்பாக பெண் ஆசிரியர்கள் மிகவும் சிரமப்படுகின்றனரென கடந்த வெள்ளி இரவு கொழும்பிலிருந்து நண்பர்கள் அறிவித்தனர்.

உடனடியாகவே சமூக விஞ்ஞான ஆய்வு மைய இணைப்பாளராகிய நானும், யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனும், வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷும், ஊடகவியலாளர் காண்டீபனும் மாற்றுடைகள் கொள்வனவு செய்து கடந்த சனிக்கிழமை நண்பகல் முல்லைத்தீவு விமானப்படை முகாமிற்கு கொண்டு சென்று அவற்றை வழங்கினோம்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக விவகாரம் இலங்கைத் தீவில் வாழும் அனைத்து மக்களும் கவனத்தில் கொள்ள வேண்டிய விவகாரமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை நான்கு காரணங்களுக்காக இதில் அக்கறைப்படவேண்டியுள்ளது.

இதில் முதலாவது கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலம் ஏனைய பல்கலைக்கழக ஒழுங்கிலிருந்து விலகி தனியான பல்கலைக்கழகமாகப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்க இருக்கின்றது. பாதுகாப்பு கற்கை நெறியைத்தவிர சமூக விஞ்ஞானம், பொறியியல் கற்கைத்துறைகளும் அங்கு இடம்பெற உள்ளன. இவ்வாறு தனியாகச் செயற்படுவது பொதுக்கல்வியைப் பாதிக்கும்.

இன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழேயே இயங்குகின்றன. எனவே இச் சட்டமூலத்தை தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது.

இரண்டாவது, சுகாதார விதிமுறைகளுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்திய ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டமை ஓர் அடிப்படை உரிமை மீறலாகும். அடிப்படை உரிமை மீறல் எங்கு இடம் பெற்றாலும் அதற்கு எதிராகப் போராடுவதும், போராட்டம் நடத்தியவர்ளுக்கு ஆதரவு வழங்குவதும் தமிழ் மக்களது கடமையாகும்.

மூன்றாவது, இலங்கை ஆசிரியர் சங்கம் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுள்ளது. அதன் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றது. இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தமிழ் மக்களின் அரசியல் நியாயப்பாடுகளுக்காக தென்னிலங்கையில் குரல் கொடுத்து வருகின்றார். போராட்டங்களை நடத்துகின்றார். எனவே, தமிழ் மக்களின் நட்புச்சக்திகளாகிய இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

நான்காவது, தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் வெற்றியடைய வேண்டுமானால் சிங்கள மக்களில் ஒரு பகுதியினரது ஆதரவையாவது வென்றெடுப்பது அவசியமாகும். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுப்பதன் மூலமும், போராட்டத்தில் பங்குபற்றுவதன் மூலமும் சிங்கள மக்களோடு நாமும் நிற்கின்றோம் என்ற செய்தியை வழங்குகின்றோம். இது எதிர்காலத்தில் சிங்கள மக்களில் ஒரு பகுதியினரையாவது எமது போராட்டத்துக்குச் சார்பாக வென்றெடுப்பதற்கு உதவிக்கரமாக அமையும்.

எனவே தமிழ் மக்கள் சார்பாக பின்வரும் மூன்று கோரிக்கைகளை இலங்கை அரசிடம் முன்வைக்கின்றோம்

ஜோசப் ஸ்டாலின் உட்பட இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் தனிமைப்படுத்தலிலிருந்து உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும், பொதுக்கல்வியை சீரழிக்கும் கொத்தலாவலை பல்கலைக்கழக சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும், ஆசிரிய சமூகத்தின் அனைத்து உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். – என்றார்.

# நெடுங்கேணியில் ஆணின் சடலம்



வவுனியா வடக்கு – நெடுங்கேணி, பட்டுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில், இலங்கட்டிக்குளத்திற்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

அதேவேளை குறித்த சடலம் பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணம் வயது – 60 என்பவருடையது என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை, தனது மாடுகளைப் பார்ப்பதற்காகச் சென்ற நிலையில், இலங்கட்டி குளத்தின் அணைக்கட்டிற்கு அருகில் நேற்று (புதன் கிழமை) சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த இறப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் 15 லட்சம் மொடர்னா தடுப்பூசிகள் இலங்கைக்கு

நாளை வெள்ளிக்கிழமை மேலும் 15 லட்சம் மொடர்னா தடுப்பூசி டோஸ்கள் இலங்கைக்கு கிடைக்கப் பெற உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் குறித்த தடுப்பூசி டோஸ்கள் இலங்கைக்கு கிடைக்கப் பெற உள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் மொடர்னா தடுப்பூசிகளின் 10 லட்சம் டோஸ்களை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க கடந்த தினம் உலக சுகாதார அமைப்பு அனுமதி வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கைது; கொழும்பில் பாரிய எதிர்ப்பு பேரணி

போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை பொலிஸார் கைது செய்து, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று (புதன்கிழமை) பாரிய வாகனப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு தாமரைத் தடாக முன்றிலில் ஆரம்பமான இந்தப் பேரணி, தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நாட்டுத் துப்பாக்கியுடன் இருவர் மல்லாவியில் கைது

*தடை செய்யப்பட்ட நாட்டுத்துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் மற்றும் உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.கே.ஞானதுசாரவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதான இருவரும் விசாரணைகளின் பின் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஞானதுசார மேலும் தெரிவித்தார்.*

# தெல்லிப்பழையில் திருட்டு இளைஞர்கள் மாட்டினர்



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு நாள்களுக்கு முன் வீடு ஒன்றை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட ஐ போன் ஒன்று, நாலு சைக்கிள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடு ஒன்றில் இரண்டு நாள்களுக்கு முன்னர் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்ததுடன் திருட்டுப் பொருள்களையும் அவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவருக்கும் வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புள்ளமை விசாரணைகள் தெரிய வந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டை முழுமையாக திறக்க செப்டெம்பருக்குள் எதிர்பார்ப்பு

## சவேந்திர சில்வா தெரிவிப்பு

*நாட்டில் பாரிய அளவில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லையென்றால் செப்டெம்பர் மாதத்திற்குள் நாட்டை முழுமையாக திறக்க எதிர்பார்க்கிறோம் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.*

*சிங்கள ஊடகமொன்றில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற பின்னர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்களுக்காகவும் நாட்டை திறக்க எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீட்சிக்குள்ள ஒரே வழி...

இந்தோ – பசுபிக் பிராந்திய நாடுகளில் நேரடி முதலீடுகளைச் செய்யும் தரப்புகளுக்கு தந்திரோபாய ஆலோசனைகளை வழங்குகின்ற முக்கிய – விசேட – நிறுவனமான பவர் குறூப் ஏஸியா (பி.ஜி.ஏ.) தற்போது இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் சரிவில் இருப்பதாக தனது சேவையாளர்களுக்கு எச்சரிக்கைச் செய்தி அனுப்பியுள்ளது.

தனது சேவையாளர்களுக்கு அது தனிப்பட்ட முறையில் அனுப்பியுள்ள இரகசிய செய்தியில் –

இலங்கையின் வெளிநாட்டுப் பணக் கையிருப்பு (அந்நிய செலாவணி) குறிப்பிடத்தக்க அளவுக்கு கரைந்து போய்விட்டது.

வெளிநாட்டுக் கடன்கள் எல்லை மீறிவிட்டன.

வறுமை நிலையை நீக்கவும், பட்டினி நிலைமை ஏற்படுவதிலிருந்து மீட்கும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள இயலாத கட்டத்தை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் வெளி நிதி நிலைமை மோசமாகக் கரைந்து – வற்றிச் செல்கையில் – அதை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை விடுத்து, இலங்கை அரசும் மத்திய வங்கியும் குறுகிய கால சமாளிப்பு நடவடிக்கைகள் குறித்தே முக்கிய ஈடுபாட்டை காட்டி செயற்பட்டு வருகின்றன.

நாட்டின் நாணயத்தின் – ரூபாவின் – பெறுமதி பெருமளவில் வீழ்ந்து செல்கின்றது. நாணய மாற்று வீதம் ஒன்றைப் பேணுவதாக அரசு கூறினாலும் வெளிச் சந்தையில் நாணயப் பெறுமதி மோசமாக வீழ்ந்து செல்வது வெளிப்படையானது.

நாட்டின் அந்நிய செலாவணி முற்றாகக் கரைந்து, வற்றிவிட்ட நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அவசர உதவியை இறைஞ்சுவது தவிர்க்க இயலாதது என்றாகியுள்ளது.

புழக்கத்துக்குத் தேவையான அமெரிக்க டொலர்களைப் பெறமுடியாத நிலையில் இலங்கை வங்கிகள் தடுமாறும் சூழலில், அதுவே – சர்வதேச நாணய நிதியத்தின் அவசர உதவிகளை விரைந்து இறைஞ்சிப் பெற முனைவதே – வாய்ப்பான ஒரே வழியாகும்.

– இப்படி தனது சேலையாளர்களுக்கு அந்த மிக முக்கிய பொருளாதார ஆலோசனை நிபுணத்துவக் கம்பனி தெரிவித்திருக்கின்றது.

அது மாத்திரமல்லாமல், இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் துல்லியமான புள்ளிவிவரங்களையும் அது வெளியிட்டுள்ளது.

உடனடியாக இலங்கை எதிர்கொள்ள வேண்டிய நிதிக் கடப்பாடுகள், கடன் தவணைக் கட்டணங்கள் என்பவற்றை நோக்கும் போது சீனா போன்ற மூன்றாம் நாடு ஒன்றின் தாராள உதவிகளின் மூலம் நெருக்கடியைச் சமாளிக்கலாம் என்ற நிலைமை தாண்டி விட்டதாகவே தோன்றுகின்றது.

ஐரோப்பிய நாடுகளுக்கு வரிச் சலுகைகளோடு உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பையும்(ஜி.எஸ்.பி. வரிச்சலுகை) இலங்கை இழக்குமானால் நிலைமை கட்டுக்கடங்காமல் மோசமான சரிவை எதிர்கொள்ளும் என்று ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நெருக்கடிகளில் இருந்து இலங்கை மீளுவதானால் வெறும் வெளிப்பூச்சு நாடகங்கள், டாம்பீக உரைகள், அவசர கால கடன் உதவிகள் போன்றவை போதுமானவையல்ல.

அவற்றையும் தாண்டி காத்திரமான நடைமுறை மாற்றங்களை, கொள்கைக் கோட்பாட்டு நகர்வுகளை கொழும்பு மேற்கொள்ள வேண்டும் என்பதே பொருளாதார நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அவதானிகளின் கணிப்பீடாக உள்ளது.

சீனக் கடனை அல்லது உதவிகளை மட்டும் நம்பியிருந்து அந்த வலையில் மேலும் மேலும் வீழ்ந்து நாட்டை மண்ணாக்குவதிலிருந்து மீளும் ஒரு கொள்கை மாற்றத்துக்கு கொழும்பு ஆட்சிப் பீடம் தயாராக வேண்டும்.

இராணுவக் கட்டமைப்பு ரீதியாக அரச நிர்வாகத்தை மாற்றும் போக்கிலிருந்து தன்னை விடுத்து, மனித உரிமைகளை மீறும் தனது கெடுபிடிப்போக்கை மாற்றி, இதுவரை காலமும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான வகையில் விசாரணைகளை நடத்தவும், உண்மைகளைக் கண்டறியவும், பொறுப்புக் கூறலை நிலை நாட்டவும், இழப்பீடுகளைத் தாமதமின்றி வழங்கவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் அரசு விரைந்து இணங்க வேண்டும்.

இந்தப் பெரு மாற்றங்களுக்கு முன்வந்து, அதன் மூலம் மேற்குலகை திருப்திப்படுத்தி, தன்வசப்படுத்த கொழும்பு ஆட்சிப் பீடம் முன்வந்தால் மட்டுமே நாடு இந்தப் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்து மீள முடியும்.

இல்லையேல், தோற்றுப் போன நாடாக இலங்கை மாறுவது திண்ணம். அதனை யாரும் காப்பாற்ற முடியாது என்பது நிச்சயம்.

## வீதிப் புனரமைப்புக்கு தடையான மின்சார, தொலைத்தொடர்பு கம்பங்களை அகற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம்

### கரைச்சி பிரதேசசபை அமர்வில் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 15

வீதிகளைப் புனரமைக்க இ.மி.சபையினதும் தொ.தொ.நிலையங்களினதும் கம்பங்களை அகற்ற உரிய நிறுவனங்களிற்கு அறிவித்து அவற்றை நகர்த்தித் தருமாறு உறுப்பினர் மு.சிவமோகன் கோரிக்கை விடுத்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் தவிசாளர் வேழமாலிதன் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்படி கோரிக்கையினை விடுத்தார்.

இதன்போது சபை எல்லைப் பகுதிக்குள் உள்ள பல கம்பங்கள் நடுவீதியில் உள்ளன. இ.மி.சபைக்கு இரு கடிதங்கள் அனுப்பியும் மின்சார சபை பதிலளிக்கவில்லை. இதனால் ஆளுநரின் கவனத்திற்கும் கொண்டு சென்றோம் தீர்வு கிட்டவில்லை.

கம்பங்களைப் பிடுங்கி இடம்மாற்றம் செய்ய ஒரு கம்பத்திற்கு 8 ஆயிரம் ரூபா வீதம் கோருகின்றனர். ஆனால் எந்தக் கம்பத்தையும் நாட்ட சபையிடம் அனுமதி பெறப்படவில்லை. எனவே குறித்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கைக்கு செல்வதற்கு ஆலோசிக்கப்படுகின்றது. – என்றார்.

## மொத்த சனத்தொகையில் 36 சதவீதமானோருக்கு தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டது

நாட்டின் மொத்த சனத்தொகையில் 36 சதவீதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் ரஞ்சித் பட்டுவன்துடாவ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், மொத்த சனத்தொகையில் 13 சதவீதமானோருக்கு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் செலுத்தப்பட்டுள்ளன என அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேநேரம், கொழும்பு மாவட்டத்தில் 70 சதவீதமானோருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 56 சதவீதமானோருக்கும் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 3 கத்தோலிக்க சொரூபங்கள் மீது மன்னாரில் தாக்குதல் சம்பவம்



மன்னார் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மூன்று இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீது நேற்று (புதன்கிழமை) அதிகாலை அடையாளந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் வயல் வீதி பகுதியில் காணப்படுகின்ற இரு சொரூபங்களும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சொரூபம் ஒன்றும் உள்ளடங்களாக மூன்று சொரூபங்கள் மீது கற்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக் கூடு உடைந்து சேதமாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளிலும் மேலும் மூன்று சிற்றாலயங்கள் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரச ஊழியர்களுக்கு புதிய சட்ட வரைவு

### பிரதமர் ஆலோசனை

அரச மற்றும் அரை அரச ஊழியர்களால் கடமைகள் நிறைவேற்றப்படும் போது நேர்மையுடன் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு அமைய அந்த ஊழியர்களுக்கு உரிய பாதுகாப்பளிக்கும் வகையில் சட்ட வரைவுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட அரச மற்றும் அரை அரச ஊழியர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பில் அலரி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

மேற்படிக் கலந்துரையாடலில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய தொடர்புடைய சட்ட வரைவுகளைத் தயாரிப்பதற்கு ஆதரவளிக்கும் முகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் உள்ளிட்ட குழு நியமிக்கப்பட்டு அப் பரிந்துரைகளை ஒரு மாதக் காலப்பகுதிக்குள் வழங்குமாறு பிரதமர் பணித்தார்.

இதன்போது அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட அரச மற்றும் அரை அரச ஊழியர்களுக்கு நிவாரணமளிப்பதன் நோக்கம் தொடர்பாகப் பிரதமரின் செயலாளர் காமினி செனரத் விளக்கமளித்தார்.

2019 நவம்பர் 27 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கமைய இது வரை முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட வரைஞர் தில்ருக்ஷி சமரவீர மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன ஆகியோர் இதன்போது தெளிவுபடுத்தினர்.

அதிகாரிகளுக்கான சட்ட கட்டமைப்பிற்கு அப்பால் நேர்மையுடன் கடமைகளைச் செய்ய அனுமதிக்கக்கூடிய வரம்புகளை அடையாளம் கண்டு, அதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்ய நிறுவனத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வரைவொன்று அமைச்சரவையில் பத்திரமாகச் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என பொது சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி இதன்போது தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் சட்டவிரோத செயற்பாடுகளின் மூலம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அரச ஊழியர்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே விளக்கமளித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, பிரதமரின் மேலதிக செயலாளர் (சட்டம்) கனேஷ் தர்மவர்தன, மேலதிக செயலாளர் (சட்டம்) சந்திரா ஜயதிலக, ஜனாதிபதிப் பணிப்பாளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்த ரோஹனதீர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் 14

ந.வித்தியாதரன்

தமிழர்களுடைய ஆயுதம் தாங்கிய எழுச்சிப் போராட்டங்களுக்கு தமிழகத்திலும், இந்தியாவின் டெல்லி ஆட்சிப் பீடத்துக்கு மத்தியிலும், பிற தேசங்களிலும் போராதரவு பெருகியது 1983 ஜுலைக் கலவரத்தின் பின்னர்தான்.

அதற்கு முன்னர் விடுதலைப் போராட்ட காலத்தின் ஆரம்பக் கட்டத்தில் இளைஞர்களின் இயக்க நடவடிக்கைகள், வன்முறைத் தாக்குதல்கள் போன்றவை உலகளாவிய ரீதியில் பயங்கரவாதச் செயல்களாகவே சித்திரிக்கப்பட்டன.

ஏற்கனவே வங்கிக் கொள்ளைகள், தனியார் அடகு நிலையங்கள் மற்றும் ஆலயங்களில் கூட நடந்த கொள்ளைகள் போன்றவை தமிழ் இளைஞர்களுக்கு எதிரான கருத்தியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. வாகனக் கடத்தல்கள், வீடுகளில் கொள்ளைகள், மின் கம்ப மரண தண்டனைகள் என்று கட்டுமட்டில்லாமல் அரங்கேறிய கொடூரங்களும் மக்கள் மனதில் வித்தியாசமான கருத்து நிலைப்பாட்டை ஏற்படுத்தி நின்றன.

இந்தச் சமயத்தில், கைதான தமிழ் இளைஞர்களுக்கு தடுப்புக் காவலில் நேர்ந்த அவலங்கள், சித்திரவதைகள், இம்சைகள் போன்றவைதான் அந்த இளைஞர்கள் எத்தகைய ஆபத்துக்குள் இந்த விடுதலைப் போராட்டத்தை முன் நகர்த்த முயல்கின்றார்கள் என்ற உண்மையை மக்களுக்கு எடுத்தியம்புவனவாக அமைந்தன.

அது மாத்திரமல்லாமல், தமிழர்கள் யாருக்கு எதிராகப் போராடப் புறப்பட்டிருக்கின்றார்களோ அவர்கள் மிகக் கொடூரமானவர்கள், நாகரிகப் பண்பியல்பே அற்றவர்கள் என்பதை அம்பலப்படுத்தி, அவர்களை வன்முறையில் எதிர்கொள்வது தப்பே இல்லை என்ற மனவுணர்வைத் தமிழ் மக்கள் மத்தியில் அச் செய்திகள் விதைத்தன.

ஆக, தடுப்புக் காவலில் தமிழ் இளைஞர்களுக்கு நேர்ந்த அவலங்கள், அவர்கள் எதிர்கொண்ட சித்திரவதைகள் போன்றவை பற்றிய செய்திகள், தகவல்கள் ஆயுதப் போராட்ட விடுதலைப் பாதையை நியாயப்படுத்தி நிற்கும் விடயங்களாகத் திகழ்ந்தன.



இந்தோனேஷியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பத்திரிகை ஆசிரியராகப் பங்குபற்றச் செல்லும் எஸ்.டி.எஸ்ஸை வழி அனுப்பி வைக்கும் குடும்பத்தினர் மற்றும் சொல்லின் செல்வர் இராஜதுரை, பத்திரிகையாளர் கே.கே.இரத்தினசிங்கம், மெய்கண்டான் அதிபர் இரத்தினசபாபதி ஆகியோர்.

அதேசமயம் கைதான தமிழ் இளைஞர்களும் தங்களுக்கு நேர்ந்த விபரீதங்கள் தமிழ் மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எட்ட வேண்டும், அதன் மூலம் சிங்களத்தின் முகமூடி கிழிக்கப்பட வேண்டும் என்றும் கருதினர். அந்த உண்மைகள் அம்பலமாவதன் மூலமாவது தாங்கள் வெளியே வர வாய்ப்புக் கிட்டாதா என்றும் அவர்கள் ஏங்கினர்.

அன்றைய சூழலில் இப்படி சமூக ஊடகங்கள், இணையத் தளங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் பலமாக இல்லை.

தொலைக்காட்சிச் சேவை, வானொலி போன்றவை அரச சேவைகளாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. பத்திரிகைகள் மாத்திரமே காத்திரமான பங்களிப்பைச் செய்யக் கூடியனவாக இருந்தன.

தேசிய மட்டத்தில் மூன்று தமிழ்ப் பத்திரிகைகள் ஆதிக்கம் செலுத்தின. 'வீரகேசரி', 'தினபதி' மற்றும் 'சிந்தாமணி', 'தினகரன்' ஆகியவையே இருந்தன.

இதில் 'தினகரன்' அரசின் கட்டுப்பாட்டில் இருந்த லேக்ஹவுஸ் வெளியீடாக – அரச குரலாக – ஒலித்தது. அதனால் அந்தப் பத்திரிகை தொடர்பில் தமிழ் மக்களின் பார்வை வேறு விதமாக இருந்தது.

'தினபதி' மற்றும் 'சிந்தாமணி' குறித்தும் கூட வித்தியாசமான பார்வை மக்களுக்கு இருந்தது. அவை தமிழர் விடுதலைக் கூட்டணியைக் காட்டமாக விமர்சிக்கும் நிலைப்பாட்டைப் பேணின. எனினும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான போக்கை அவை பின்பற்றவில்லை.

மாறாக, தமிழ் இளைஞர்களை மெச்சுவது போலக் காட்டி, கூட்டணிக்கு எதிராகத் தமிழ் இளைஞர்களைத் தூண்டி விடும் போக்கை அவை பின்பற்றுகின்றன என்ற குற்றச்சாட்டும் இருந்தது.

எனினும், அங்கு சாதாரண செய்தியாளனாகப் பணியாற்றிய எனக்கு இந்த விடயங்களில் – நிலைப்பாடுகளில் – செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்போ, தீர்மானிக்கும் விடயத்தில் பங்களிக்கும் சந்தர்ப்பமோ இருக்கவில்லை.

ஆனாலும், செய்தியாளன் என்ற முறையில் 'தினபதி', அலுவலகத்துக்குள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் போன்றோரின் நம்பிக்கைக்குரிய 'ஆள்' என்ற கருத்து ஆசிரிய பீடத்தின் மற்றைய சகாக்கள் மத்தியில் என் குறித்து இருந்தது என்பதை நானறிவேன். ஆசிரியர் சிவநாயகம் ஐயா கூட செய்தி சேகரித்து விட்டுத் திரும்பும் போது *"என்னவாம் உம்முடைய அமிர்தலிங்கம்?"* என்று கேட்பார். அதில் 'உம்முடைய அமிர்தலிங்கம்' என்ற வார்த்தைகள் நையாண்டியுடன் அழுத்தமாக அமைந்திருப்பதை நான் நோக்கியிருக்கிறேன்.

ஆனாலும் அவ்வப்போது அழைத்து, அத்தகைய மூத்த தலைவர்களுடன் நம்பிக்கையையும், நெருக்கத்தையும் பேணுவது கட்டாயம், அப்போதுதான் செய்திகள் சேகரிக்க முடியும் என்ற ஆலோசனைகளையும் சுற்றிவளைத்து சிவநாயகம் ஐயா கோடி காட்டத் தவறுவதில்லை. அப்படியான அவரின் 'அட்வைஸ்கள்' இப்போதும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"அரசியல்வாதிகளுடன் நெருங்கிப் பழகுங்கள். ஆனால் தனிப்பட்ட – சொந்த உதவி கேட்டுப் போகாதீர்கள். உங்களைத் தாழ்த்திக் கொள்ள இடமளிக்காதீர்கள்" என்பது அவரின் திட்டவட்டமான வழிகாட்டல்கள். இது பற்றிய சில விடயங்களைப் பின்னர் தருவேன்.

சரி. இனி மீண்டும் விட்ட இடத்துக்கு வருவோம்.

அன்றைய கால கட்டத்தில் தமிழ் இளைஞர்களுக்குத் தடுப்புக் காவலில் நேர்ந்த – தொடர்ந்து நேர்ந்து கொண்டிருக்கின்ற – அவலங்களை வெளிப்படுத்துவதற்கு ஒரே வாய்ப்பு தமிழ்ப் பத்திரிகைகள்தான். அதுவும் நீதிமன்றங்களில் வெளிப்படுத்தப்படும் தகவல்கள் மூலமே அவற்றை அம்பலப்படுத்த முடியும்.

கைதிகள் பலரும் தங்களுக்கு எதிரான வழக்குகளின் போது பல விடயங்களை சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியங்களாக முன்வைத்தனர்.

ஒரு கைதி தடுப்புக்காவலில் வைத்து அளித்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், சித்திரவதை செய்து, வல்வந்தமாக ஒப்பம் பெறப்பட்டு, புனையப்பட்ட ஓர் ஆவணம் என்பதை நிரூபிப்பதற்காக அந்தக் கைதியையும் அவர்களுடன் காவலில் இருந்த வேறு கைதிகளையும் சாட்சிக் கூண்டில் ஏற்றுவார்கள் அவர்களின் பக்கச் சட்டத்தரணிகள்.

அச்சமயம், அக்கைதிகள் தங்களுக்கு நேர்ந்த அவலங்கள், கொடூரங்கள், சித்திரவதைகளை வரிசையாக அடுக்குவார்கள். மனதைப் பதற வைக்கும் கொடூரங்களும் குரூரங்களும் அவற்றில் அடங்கியிருக்கும்.



கொழும்பு சத்ய சாயி நிலையத்தின் தலைமைப் பதவியை எஸ்.டி.சிவநாயகம் பொறுப்பேற்றபோது...

தலை கீழாகக் கட்டித் தூக்கித் தொங்க விட்டு, கடுமையாக பட்டன் பொல்லுகளால் தாக்கி விட்டு, முகத்தை மூடி சாக்கைக் கட்டி மீண்டும் தூக்கித் தொங்க விடுவார்கள். அந்தச் சாக்கின் அடியில் நெருப்புத் தணல் சட்டியை வைத்து அதற்குள் மிளகாய்த் தூளைப் போட்டு விடுவார்கள். இந்த மிளகாய்த் தூள் 'ட்ரீட்மண்ட்' குறித்து விலாவாரியான, விவரமான விடயங்களை எமது நீதிமன்றச் செய்திகள் தாங்கி வந்தன.

அவற்றை வாசிப்பவர்களின் மனம் பதறும்.

குதத்துக்குள் பட்டன் பொல்லை வைத்து அடித்து உள் செலுத்துதல் வரை நானாவித அகோரங்கள் பற்றி எல்லாம் நீதிமன்றச் சாட்சியங்களில் கூறப்பட்டன. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு ரகமான சித்திரவதை பற்றிய தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

வாசகர்களின் நெஞ்சைத் தொடும் வகையில் – பதற வைக்கும் விதத்தில் – அந்த சாட்சியங்களை நான் தொகுத்துத் தினசரி எழுதுவேன்.

தமிழ்க் கைதிகள் கூறிய தகவல்கள் உண்மையோ, பொய்யோ வேறு விடயம். ஆனால் அந்தக் கொடூரம் நிகழ்ந்தமை தொடர்பான ஒரு காட்சி வாசகன் மனத்திரையில் வரக் கூடிய விதத்தில் என் தொகுப்பு இருக்கும்.

பொதுவாக கைதி ஒருவரின் இத்தகைய விடயங்கள் அடங்கிய தகவலையோ, பேட்டிகளையோ நாம் ஊடகத்தில் பிரசுரிக்க முடியாது.

ஆனால், இது நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியம். நீதிமன்றினால் விசேடமாகத் தடுக்கப்பட்டாலன்றி, இவற்றை நாம் பிரசுரிக்கின்றமையை சட்டரீதியாக யாரும் தடுக்க முடியாது. நிறைவேற்றதிகாரமோ, நாடாளுமன்றமோ கூடத் தடுக்க முடியாது.

நீதிமன்றத்தில் நடக்கும் செய்திகள் பற்றிய விவரிப்பில் எமது சிங்கள நிறுவனத்தின் நிர்வாகம் தலையிடுவது கூட முறையற்றது என்பதால் நிர்வாகமும் நீதிமன்றச் செய்திகளின் போக்கில் தலையிடுவதில்லை என்பது எனக்குத் தெரியும்.

இந்த நிலைமையை வசதியாகப் பயன்படுத்தி, அகலக் கால் பரப்பி, விரிந்த மைதானத்தில் விளையாடுவதற்கு வசதி அளித்தமை போன்ற சூழல் எனக்குக் கிடைத்தது.

அதனால் தமிழ்க் கைதிகளுக்கு நேர்ந்த சித்திரவதைகள் பற்றிய விடயம் தினசரி ஒன்றரை இரண்டு பக்கங்களுக்கு (பெரும்பாலும் உள் பக்கத்தில்) 'தினபதி' யில் பிரசுரமாகின. இந்தச் செய்திகளை அறிவதற்கு 'தினபதி' வாங்க வேண்டும் என்ற கட்டாயத்தை 'தினபதி' உருவாக்கியது.

அன்றைய சூழலில் அந்தச் செய்திகளைத் தேடி வாசித்தறியும் நிலையில் தமிழ் வாசகர்கள் இருந்தார்கள். அதே சமயம் தமக்கு நேர்ந்த அவலங்களை 'தினபதி' உரிய முறையில் விரிவாக வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது என்ற திருப்தியில் தமிழ்க் கைதிகளும் இருந்தனர்.

இந்தச் சூழ்நிலையை வசமாக – வாய்ப்பாக – பயன்படுத்தி, எனக்கு நேர்ந்த இக்கட்டிலிருந்து என்னை விடுவிக்க வியூகம் வகுத்தார் எஸ்.டி.எஸ்.ஐயா.

என்னைக் கூப்பிட்டு எனக்கு விளக்கமான 'அட்வைஸ்' தந்தார்.

அந்த மதி நுட்ப உத்தி என்னை நெருக்கடியிலிருந்து மீட்டது. அதனை நாளை விவரிப்பேன்.

(வளரும்)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | விஞ்ஞானம் | அலகு 09

## அங்கிகளில் நிகழும் கூர்ப்புச் செயன்முறை

* சூழலில் காணப்படும் அங்கிகளின் பல்வகைமையானது அங்கிகளில் நிகழும் கூர்ப்பு செயன்முறையின் விளைவாகும்.
* புவி உட்பட முழு அகிலமும் யாதேனும் படைப்பின் தோன்றின, அதாவது இன்று காணப்படுவதைப் போலவே இறைவனால் படைக்கப்பட்டன என நம்பப்படுகிறது.
* இங்கு அகிலம் எனக்குறிப்பிடுவது அண்டவெளி அதாவது நாம் வாழும் ஞாயிற்றுத் தொகுதி போல பல உடுத்தொகுதிகள் அடங்கியுள்ளன.

### 9.1 புவியின் தோற்றுவாய்

* தற்போதைய உலகத்தின் தோற்றம் பல கொள்ளைகளால் விளக்கப்படுகிறது.
* நெபியுலாக் கோட்பாடு, பெருவெடிப்பு கொள்கை என்பவற்றினூடாக விளக்கப்படுகிறது.

1. புவியானது எத்தனை வருடங்களுக்கு முன்னர் தோன்றியதாக கருதப்படுகிறது? ......................................................
2. கோள்களின் கூர்ப்பு தொடர்பாக முதன்முதலாக முன்வைக்கப்பட்ட கோட்பாடு எது? ......................................................
3. நெபியுலாக் கோட்பாட்டில் குறிப்பிடப்படுவது யாது? ..............................
4. புவியின் தோற்றுவாய் தொடர்பாக முன்வைக்கப்பட்ட நவீன கோட்பாடாகக் கொள்ளப்படுவது யாது? ..............................
5. பெருவெடிப்புக் கொள்கையில் குறிப்பிடப்படுவது யாது? ..............................
6. இப் பெருவெடிப்புக் கொள்கை எதனை விளக்குகிறது? ..............................
7. புவியின் கோளத்தின் தோற்றம் பற்றிய கொள்கையை எளிய முறையில் குறிப்பிடுக? ..............................
8. புவியின் வாயுக்களின் தோற்றுவாயை விளக்குக? ..............................
9. ஆரம்ப கால வளிமண்டலமானது ஒட்சிசன் வாயுவைக் கொண்டிருக்கவில்லை, புவியின் ஆரம்ப கால வளிமண்டலமானது எவ்வாயுக்களைக் கொண்டிருந்தன? ......................................................
10. புவியில் சமுத்திரம் எவ்வாறு தோன்றியது? ..............................

### 9.2 புவியில் உயிரின் தோற்றம்

* இற்றைக்கு 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பதாகவே புவியின் மீது உயிரங்கிகள் தோன்றியதாக கருதப்படுகிறது.
* உயிரின் தோற்றத்தைப் பற்றி பல கொள்கைகள் விளக்குகின்றன.

1. புவியில் அங்கிகள் எத்தனை வருடங்களுக்கு முன்னர் தோன்றியது? ......................................................
2. புவியின் மீது அங்கிகளின் தோற்றம் தொடர்பாகக் குறிப்பிடும் கொள்கைகள் 4 தருக? ..............................
3. சிறப்புப்படைப்புக் கொள்கை குறிப்பிடுவது எதை? ..............................
4. தன்னிச்சை பிறப்பாக்கக் கொள்கை குறிப்பிடுவது எது? ..............................
5. தன்னிச்சை பிறப்பாக்கக் கொள்கையின் படி உயிரினங்கள் தோன்றிய உயிரற்ற பொருட்களுக்கான உதாரணங்கள் தருக? ..............................
6. தன்னிச்சை பிறப்பாக்க கொள்கை தவறு என நிரூபித்த விஞ்ஞானி யார்? ......................................................
7. அது பிழை என பரிசோதனை ரீதியாக உறுதிப்படுத்தியவர் யார்? ..............................
8. அண்டவெளி பிறப்பாக்கக் கொள்கையில் குறிப்பிடப்படுவது யாது? ......................................................
9. உயிரிராசாயனக் கூர்ப்புக் கொள்கையில் குறிப்பிடுவது யாது? ..............................
10. உயிரி தோன்றுவதற்குத் தேவையான தாக்கங்களிற்கான சக்தி எங்கிருந்து பெறப்பட்டதாக நம்பப்படுகிறது? ..............................
11. ஆதிக்கூழ் எனப்படுவது யாது? ..............................
12. ஆரம்ப உயிரிக்கலம் / ஆதியான கலம் எவ்வாறு தோன்றியது? ..............................
13. ஆரம்ப கால எளிய அங்கிகள் எவ்வாறு இருந்தன? ..............................
14. புவியின் ஆரம்ப உயிரியாக கருதப்படுவது எது? ..............................
15. அதனைத் தொடர்ந்து உருவான முதலாவது ஒளித்தொகுப்புச் செய்யும் அங்கி எது? ..............................
16. சயனோ பற்றீரியாக்களின் ஒளித்தொகுப்பு விளைவால் ஏற்பட்ட அனுகூலம் ஒன்று தருக? ..............................
17. நீண்ட காலமாக தனிக்கல அங்கியின் உடலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களின் விளைவாக பலகலத்தாலான உடலைக் கொண்ட அங்கிகள் உருவாகின. இப் பல்கல அங்கிகளினுள் இழையங்கள் அங்கங்கள், தொகுதிகள் என்பன படிப்படியாக வியர்த்தமடைந்து இறுதியாக தாவர, விலங்கு உலகம் உருவானது.
ஆரம்பகால பல்கல அங்கிகளாக கருதப்பட்டவை எவை? ..............................
18. முதன் முதலில் தோன்றிய முள்ளந்தண்டுளிக் கூட்டம் எது? ..............................
19. மீன்களில் இருந்து தோன்றியவை? ..............................
20. முதன்முதலாக தரையை நோக்கி குடிபெயர்ந்த முள்ளந்தண்டுளியாக கருதப்படுவது எது? ..............................
21. தரைவாழ்க்கைக்கு முழுமையாக இசைவாக்கமடைந்த தரைவாழ் அங்கிகள் எவை? ..............................
22. நகருயிர்களில் இருந்து தோன்றியதாக கருதப்படுவன எவை?..............................
23. மனிதக் கூர்ப்பின் ஆரம்பம் எப்போது உருவானது? ..............................
24. நவீன மனித வர்க்கத்தின் ஆரம்பம் எப்போது உருவானது? ..............................
25. தாவர உலகம் எதில் இருந்து படிப்படியாக தோன்றியது? ..............................

### 9.3 கூர்ப்பு

* சூழலில் நடைபெறும் தொடர்ச்சியான மாற்றங்களுக்கேற்ப அங்கிகளின் உடலினுள் ஏற்படும் படிப்படியான மாற்றங்கள் காரணமாக அங்கிகளின் நிலவுகை உறுதிப்படுத்தப்படுகிறது.
* புவியின் மீது தோன்றிய ஆரம்ப எளிய அங்கிகள் காலத்துடன் பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகிச் சிக்கலான அங்கிகளாக தோற்றின.
* மனிதக் கூர்ப்பு தொடர்பான முக்கிய சான்றுகள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1. கூர்ப்பு என்பதனால் குறிப்பிடப்படுவது யாது? ..............................
2. மனிதக் கூர்ப்பு தொடர்பான முக்கிய சான்றுகள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கூர்ப்பு நடைபெற்றமைக்கான சான்றுகள் சில குறிப்பிடுக? ......................................................

#### உயிர்சுவடுகள்

3. உயிர்சுவடுகள் என்பதனால் கருதப்படுவது யாது? ......................................................
4. உயிர்சுவடுகள் காணப்படக்கூடிய இடங்களைக் குறிப்பிடுக? ......................................................
5. உயிர்சுவடுகளாகக் கருதப்படும் பொருள்கள் சிவவற்றிற்கான உதாரணங்கள் சில தருக? ..............................

#### வாழும் உயிர்சுவடுகள்

* கூர்ப்புரீதியில் மிகப் பழமையான தோற்றுவாயைக் கொண்ட காலநிலை மாற்றங்களுக்கு, சூழல் மாற்றங்களுக்கு முகம் கொடுத்தாலும் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட உடலியல்புகளை அவ்வாறே பேணிக்காத்தவாறே வாழுகின்ற கூர்ப்பிற்குட்படாத அங்கிகள் வாழும் உயிர்ச்சுவடுகள் எனப்படும்.

6. வாழும் உயிர்சுவடுகள் என்றால் என்ன? ..............................
7. வாழும் உயிர்சுவடுகளாகக் காணப்படும் அங்கிகள் சில தருக?..............................
8. உயிர்ச்சுவடுகளின் வயதை எதைக்கொண்டு கணிக்கலாம்? ..............................
9. கூர்ப்புச் செயன்முறையுடன் தொடர்பான பூரணமான உயிர்ச்சுவட்டு சான்றுகளுடன் கூடிய விலங்கு ஒன்று குறிப்பிடுக? ..............................

### 9.4 உயிர்ப்பல்வகைமையில் கூர்ப்பின் முக்கியத்துவம்

* கூர்ப்பின் முக்கியத்துவமாக உயிர்ப்பல்வகைமையை குறிப்பிடலாம்.
* உயிர்ப்பல்வகைமை காரணமாக வரையறுக்கப்பட்ட வளங்களுக்காக அங்கிகளிடையே போட்டி குறைகிறது.

1. கூர்ப்பின் முக்கியத்துவம் யாது? ..............................
2. கூர்ப்பின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்? ..............................
3. அங்கி கூர்ப்பு தொடர்பாக விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை யாது?..............................

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## 14 வயது சிறுமி மீது துஷ்பிரயோக முயற்சி 21 வயது இளைஞனுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த 21வயதுடைய இளைஞனை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம்.நிஸ்வான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமியை அவர்களது பெற்றோருக்கு தெரியாமல் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறுமியின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள குறித்த இளைஞன் கோவிலுக்கு அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் என சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், குறித்த இளைஞர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## சிசுவை கொலை செய்து தீ வைத்து எரித்த தாய் 28 வரை விளக்கமறியலில்

கந்தளாய் - பேராறு பிரதேசத்தில் பிறந்த பெண் சிசுவை கொலை செய்து தீ வைத்து எரித்த தாய் ஒருவரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

கந்தளாய் பேராறு மத்ரஸாநகர் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய சுபியான் பாரூக் பௌமியா என்ற பெண்ணொருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தவறான உறவின் மூலம் பிறந்த சிசுவை கொலை செய்து எரித்த குற்றச் செயலுடன் தொடர்புடைய மூன்று பிள்ளைகளின் தாயாரை கந்தளாய் பொலிஸார் கைது செய்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரின் கணவர் வெளிநாடு சென்றுள்ள நிலையிலே இவ்வாறு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து தேசிய விளையாட்டுச் சங்கங்களினது பதிவுகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன

இலங்கையின் ஐந்து தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகளை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தற்காலிகமாக ரத்து செய்து விசேட வர்த்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம், இலங்கை ஜூடோ சங்கம், இலங்கை ஸ்கிரப்பல் சம்மேளனம், இலங்கை சர்பிங் சம்மேளனம் மற்றும் இலங்கை ஜூஜிட்சு சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகள் ரத்தாகியுள்ளன.

இந்த அமைப்புகளுக்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் எதிரிசூரிய, ஜூலை 1 முதல் அமுலாகும் வகையில் அதிகாரம் பொருந்தியவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நான்கு வாரங்களின் பின்னர் ஆசிரியர்களுக்கு 2 ஆவது டோஸ்

பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை பத்து நாள்களுக்குள் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நான்கு வாரங்களின் பின்னர் அனைத்து ஆசிரியர்களுக்கும் இரண்டாவது தடுப்பூசி மருந்தை வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் கூறினார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரில் பரீட்சை முதலானவற்றை நடத்துவதா இல்லையா அல்லது மீண்டும் ஒத்திவைப்பதா என்பது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 13, 14

01. 1. முறைமைப்பின்னங்கள் $\frac{1}{3}, \frac{2}{3}, \frac{4}{5}, \frac{1}{7}, \frac{y}{x}$ if $x > y$

2. முறைமையில்லாப்பின்னங்கள் $\frac{9}{5}, \frac{10}{7}, \frac{15}{2}, \frac{y}{x}$ if $y > x$

02.

| 02. | | 03. | |
|---|---|---|---|
| 1. $1\frac{1}{5}$ | 1. $\frac{5}{3}$ | 1. $\frac{10}{3}$ | 11. $\frac{2}{5}$ |
| 2. $3\frac{1}{2}$ | 2. $\frac{8}{3}$ | 2. $\frac{12}{5}$ | 12. $\frac{1}{4}$ |
| 3. $2\frac{1}{4}$ | 3. $\frac{16}{6}$ | 3. $\frac{14}{15}$ | 13. $\frac{2}{3}$ |
| 4. $2\frac{1}{5}$ | 4. $\frac{35}{9}$ | 4. $\frac{4}{5}$ | 14. 6 |
| 5. $4\frac{2}{3}$ | 5. $\frac{7}{6}$ | 5. $\frac{8}{11}$ | 15. $\frac{4}{9}$ |
| 6. $1\frac{4}{9}$ | 6. $\frac{9}{2}$ | 6. $\frac{27}{10}$ | 16. 26 |
| | | | 17. 14 |
| 7. $2\frac{2}{7}$ | 7. $\frac{41}{8}$ | 7. $\frac{72}{7}$ | 18. $\frac{1}{5}$ |
| 8. $2\frac{3}{8}$ | 8. $\frac{19}{6}$ | 8. $\frac{21}{10}$ | 19. 4 |
| | | | 20. 12 |
| 9. $2\frac{1}{11}$ | 9. $\frac{10}{3}$ | 9. $\frac{13}{11}$ | |
| 10. $2\frac{1}{7}$ | 10. $\frac{58}{7}$ | 10. $\frac{33}{20}$ | |
| 11. $2\frac{7}{8}$ | 11. $\frac{23}{3}$ | | |
| 12. $3\frac{1}{6}$ | 12. $\frac{37}{6}$ | | |

04.

| | | | |
|---|---|---|---|
| 1. $\frac{1}{6}$ | 6. $\frac{63}{60}$ | 11. $\frac{1}{2}$ | 16. $\frac{1}{3}$ |
| 2. $\frac{3}{8}$ | 7. $\frac{25}{72}$ | 12. $\frac{1}{6}$ | 17. $\frac{2}{3}$ |
| 3. $\frac{9}{20}$ | 8. $\frac{21}{40}$ | 13. $\frac{1}{3}$ | 18. 1 |
| 4. $\frac{21}{40}$ | 9. $\frac{48}{91}$ | 14. $\frac{1}{2}$ | 19. $\frac{3}{5}$ |
| 5. $\frac{1}{6}$ | 10. $\frac{24}{91}$ | 15. $\frac{1}{4}$ | 20. $\frac{1}{10}$ |

05.

| | | | |
|---|---|---|---|
| 1. $\frac{1}{2}$ | 11. $2\frac{11}{12}$ | 21. $1\frac{1}{6}$ | 31. $2\frac{11}{98}$ |
| 2. $1\frac{7}{8}$ | 12. $3\frac{9}{182}$ | 22. $1\frac{1}{7}$ | 32. 8 |
| 3. $2\frac{7}{10}$ | 13. $6\frac{58}{72}$ | 23. $1\frac{1}{3}$ | 33. $4\frac{1}{14}$ |
| 4. $4\frac{1}{40}$ | 14. $5\frac{51}{300}$ | 24. $2\frac{3}{10}$ | 34. 2 |
| 5. $1\frac{5}{6}$ | 15. $2\frac{17}{25}$ | 25. $\frac{19}{36}$ | 35. $12\frac{2}{5}$ |
| 6. $3\frac{39}{80}$ | 16. $2\frac{6}{13}$ | 26. $\frac{16}{21}$ | 36. 1 |
| 7. $1\frac{35}{72}$ | 17. $8\frac{14}{17}$ | 27. 8 | 37. $2\frac{1}{2}$ |
| | | 28. 3 | |
| 8. $1\frac{37}{40}$ | 18. $6\frac{351}{420}$ | 29. $3\frac{3}{25}$ | 38. 4 |
| | | | 39. $2\frac{1}{5}$ |
| 9. $2\frac{1}{13}$ | 19. $13\frac{1957}{2261}$ | 30. $1\frac{7}{20}$ | 40. $2\frac{11}{20}$ |
| 10. $1\frac{17}{91}$ | 20. $3\frac{62}{125}$ | | |

பின்னங்கள் 2

| 01. | 02. | 03. |
|---|---|---|
| 1. $\frac{1}{2}$ | 2. $\frac{4}{5} \times \frac{1}{20} = \frac{1}{25}$ | 2. $\frac{4}{5} \times \frac{2}{1} = \frac{8}{5}$ |
| 2. $\frac{1}{5}$ | 3. $\frac{2}{15} \times \frac{1}{4} = \frac{1}{30}$ | 3. $\frac{2}{15} \times \frac{7}{4} = \frac{7}{30}$ |
| 3. $\frac{1}{7}$ | 4. $\frac{1}{5} \times \frac{1}{3} = \frac{1}{15}$ | 4. $\frac{1}{5} \times \frac{4}{3} = \frac{4}{15}$ |
| 4. 3 | 5. $\frac{4}{11} \times \frac{1}{12} = \frac{1}{33}$ | 5. $\frac{12}{7} \times \frac{13}{9} = \frac{53}{21}$ |
| 5. $\frac{2}{3}$ | 6. $\frac{3}{10} \times \frac{1}{27} = \frac{1}{90}$ | 6. $\frac{7}{10} \times \frac{7}{6} = \frac{49}{60}$ |
| 6. $\frac{10}{9}$ | 7. $\frac{12}{7} \times \frac{1}{36} = \frac{1}{21}$ | 7. $\frac{16}{5} \times \frac{3}{4} = \frac{12}{5}$ |
| 7. $\frac{2}{3}$ | 8. $\frac{5}{3} \times \frac{1}{15} = \frac{1}{9}$ | 8. $\frac{28}{5} \times \frac{5}{4} = 7$ |
| 8. $\frac{2}{7}$ | 9. $\frac{16}{5} \times \frac{1}{16} = \frac{1}{5}$ | 9. $\frac{52}{5} \times \frac{15}{4} = 39$ |
| 9. $\frac{8}{17}$ | 10. $\frac{24}{3} \times \frac{1}{29} = \frac{1}{3}$ | 10. $\frac{29}{3} \times \frac{10}{29} = \frac{10}{3}$ |
| 10. $\frac{8}{19}$ | | |

ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/செங்குந்த இந்துக் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கடமைகளை மங்களேஸ்வரன் பொறுப்பேற்றார்





வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக கலாநிதி த.மங்களேஸ்வரன் நேற்று (புதன் கிழமை) காலை 8.30 மணியளவில் பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கை வவுனியா பல்கலைக் கழகத்தின்முதலாவதுதுணைவேந்தராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங் களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நிலை யில், வவுனியா, பூங்கா வீதியில் இருந்து மேளதாள வாத்தியத்துடன் துணை வேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் பூங்கா வீதியில் அமைந்துள்ள பல் கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவுக்கு அழைத்து வரப்பட்டு பதிவாளர் முன் னிலையில் கடமைகளைப் பொறுப்பேற் றுக் கொண்டார்.

அதன்பின்வவுனியா இறம்பாக்குளம் அந்தோனியார் ஆலயம், கந்தசாமி ஆலயம், பிரதான பள்ளிவாசல், நகரப் பன்சாலை ஆகியவற்றுக்குச் சென்று மதத்தலைவர்களின் ஆசீர்வாதத்தை யும் பெற்றுக் கொண்டார்.

பதவியேற்ற அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு –

இதுவரை காலமும் யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகமாக செயற் பட்டு வந்த இந்தப் பல்கலைக்கழகம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் வவு னியா பல்கலைக்கழகமாக செயற்பட வுள்ளது. அதற்கான அனுமதியைப் பெறுவதற்கு உழைத்த அனைவருக்கும் நன்றிகள். அத்துடன் வவுனியா பல் கலைக்கழகத்தின் முதலாவது பீடாதி பதியாக என்னை ஜனாதிபதி அவர்கள் நியமித்துள்ளார். என் மேல் நம்பிக்கை கொண்டு என்னை இந்தப் பதவிக்கு நிய மித்தமைக்கு ஜனாதிபதி அவர்களுக் கும் நன்றிகள்.

வவுனியா வளாகத்தை பல்கலைக் கழகமாக உயர்த்துவதற்கு கடினமாகப் பாடுபட்டேன். என்னுடைய இலக்கு எனது இந்த மூன்று வருட காலப்பகுதி யில் வவுனியா பல்கலைக்கழகத்தை மேன்மேலும் தரம் உயர்த்துவதுடன், பிரதேச ரீதியான அபிவிருத்திக்கும், நாட் டின் அபிவிருத்திக்கும் பாரியளவிலான பங்களிப்பை வழங்குவோம்.

எமது பல்கலைக்கழகம் ஓகஸ்ட் முத லாம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கின்றது. 11 ஆம் திகதி ஜனாதி பதி உத்தியோகப்பூர்வமாக வருகை தந்து பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தும் வைக் கவுள்ளார் எனத் தெரிவித்தார். (100)

# 1,250 லட்சம் ரூபா லஞ்சம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பில் மீண்டும் வழக்குத் தாக்கல்

2015 ஆம் ஆண்டு 12.5 கோடி ரூபா லஞ்சம் பெற்றுக்கொண்ட சம்ப வம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் சுங்க அதிகாரிகள் நால் வருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக் குழு மீண்டும் வழக்குத் தாக்கல் செய் துள்ளது.

பஞ்சிகாத்தை பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் இறக்குமதி செய்த 150 கோடி ரூபா பெறுமதியான வாகன உதிரிப்பாகங்களை சலுகை அடிப்படையில் விடுவிக்க 12.5 கோடி ரூபா லஞ்சம் வாங்கியமை தொடர்பில் குறித்த அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லஞ்சம் ஊழல் ஆணையாளர்க ளின் எழுத்துபூர்வ ஒப்புதல் நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று பிரதிவாதி முன்வைத்த ஆட் சேபனை காரணமாக மீள வழக்குத் தாக் கல் செய்த அடிப்படையில் குறித்த வழக்கு இதற்கு முன்னர் ரத்து செய் யப்பட்டிருந்தது.

இதனையடுத்து அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்த தன் பின்னர் அவர்களுக்கு எதிராக மீண்டும் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

# 4 ஆவது கொரோனா அலையை எதிர்கொள்ள மக்கள் தயாரில்லை

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

இலங்கையில் கொரோனா வைர ஸின் நான்காவது அலையை எதிர் கொள்ள பொதுமக்கள் முழுமையாக தயாராக இல்லை என பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

நாட்டில் வைரஸின் மற்றொரு அலை உருவாக வாய்ப்புள்ளது என சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்தார்.

இலங்கை விழிப்புடன் இருப்பதா கவும் உலக முன்னேற்றங்களைக் கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

வைரஸை ஒழிக்க முடியாது என் பதை பொதுமக்கள் உணர வேண்டும் என்றும் கொரோனாவுடன் வாழும் சகாப்தத்தில் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விளக்கினார்.

மேலும் தடுப்பூசி போடுமாறு பொது மக்களைக் கேட்டுக்கொண்ட அவர், தடுப்பூசி போடப்பட்டதால் சுகாதார வழி காட்டுதல்களை அவர்கள் புறக்கணிக் கக்கூடாது என்றும் கூறினார்.

தடுப்பூசிகளின் செயற்திறன் இன் னும் முழுமையாகத் தீர்மானிக்கப் படாததால், பொதுமக்கள் தடுப்பூசிகளை மட்டுமே நம்ப முடியாது என்றும் அவர் கூறினார்.

வைரஸ் தொடர்ந்து பிறழ்வதால், மக் கள் முழுமையாக பாதுகாக்கப்பட்ட வர்கள் என்று சான்றளிக்க முடியாது என்றும் பாலசூரிய கூறினார்.

தடுப்பூசி இறப்பு விகிதத்தையும் நோயின் தீவிரத்தையும் குறைக்கும் என்று நிபுணர்கள் நம்புகிறார்கள் என் றும் ஆனால், பரவுவதற்கான ஆபத்து இன்னும் உள்ளது என்றும் அவர் கூறி னார்.

பயணக் கட்டுப்பாட்டை நாடு தளர்த் தியுள்ள இந்நேரத்தில் சுகாதார வழி காட்டுதல்களைப் பின்பற்றுவது அவசி யம் என்றும் பாலசூரிய கூறினார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 66

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



**196. சர்வதேசம், நோர்வே, இந்தியா என்பன ISGAயை எப்படிப் பார்த்தன?**

இந்தியா தனது முயற்சியில் இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கின் இணைக்கப்பட்ட ஆட்சியில் கூட்டாட்சிக்கு (Federal) குறைந்த அதிகாரங்களோடு அதன் பகுதிகளுக்கு ஓரளவு சுய ஆட்சியின் தோற்றத்தில் தீர்வை கொண்டு வந்தது. அதில் தொடங்கி, பரஸ்பர நம்பிக்கைகளாலும் இந்தியாவின் பக்க பலத்தாலும், தனி தமிழ் ஈழம் தவிர்ந்த ஒரு கூட்டாட்சிக்கு வழிவகுக்கலாம் என இந்தியத் தரப்பு கருதியது.

பாலசிங்கம் ஏற்றுக் கொண்டது கூட்டாட்சி (Federal) முறைமை. ஆனால் அதற்கும் மேலே போய் ஒரு கூட்டமைப்பை (Confederation) ISGA முன்வைத்தது.

இந்தியா சர்வதேசம் நோர்வே எல்லாமே பாலசிங்கம் ஏற்றுக் கொண்ட கூட்டாட்சி (Federal)என்பது பிரபாகரன், தொடங்கிய காலம் தொட்டு பேசிய தனித் தமிழ் ஈழம் என்பதற்கான ஒரு விழிப்புணர்வு என கருதினார்கள். (A wake up call to Pirabakaran from Balasingham) அதே சமயம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட நோர்வேயோ புலம்பெயர் தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளை அவர்கள் அளவுக்கு மீறி, புகழ்ந்து, தாங்களும் விடுதலைப் புலிகளும் தங்களைப் பற்றி கொண்டிருந்த எண்ணங்களை மிகைப்படுத்தி காட்டிக் கொள்கிறார்கள் என எண்ணினார்கள். போர் நிறுத்த காலங்களில் புலம்பெயர் நாடுகளிலிருந்து பல ஆதரவாளர்களும், அமைப்பாளர்களும் வன்னிப் பகுதிக்குச் சென்று வந்தமை போல் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோரையும் அவர்கள் நியமித்தோரையும் நோர்வே அரசு அழைத்து பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பி ஒரு வெளிநாட்டுக் கண்ணோட்டத்தைப் பார்க்க வைத்தும் அவர்கள் புலம்பெயர் மக்களை சந்திக்கவும் வைத்தார்கள். நடப்பவை பற்றி சர்வதேசம் என்ன அபிப்பிராயங்கள் கொண்டுள்ளது என்பதை விடுதலைப் புலிகளுக்கு பேச்சுக்களில் தெரியப்படுத்தாது, அவர்களை சிலாகித்தே புலம்பெயர் சமுதாயத்தினர் அனுப்பினார்கள். ஆகவே ISGA அப்படியான உறவுகளில் ஏற்பட்ட ஓர் ஆவணம், ஏட்டுச் சுரைக்காய் என நோர்வேயினால் கூடக் கருதப்பட்டது. புலிகளின் தங்களது நிலையை, மீளவும் உறுதிப்படுத்த அதை ஒரு சட்ட வடிவில், தங்களது வித்தகத்தில் சில புலம்பெயர் புத்திஜீவிகளோடு அமைந்துள்ளார்கள். அந்தப் புத்திஜீவிகளும் சர்வதேச அரசியலையோ புவியியல் நிலைமைகளையோ கணக்கெடுக்காது, கேட்டபடி ஒரு வடிவத்தை அமைத்து கொடுத்தார்கள் என்பதே அபிப்பிராயமாக இருந்தது. அது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டை மீறாத புத்திஜீவிகளின் ஆக்கம், அது பொதுத்தளத்தில் விடப்பட்டு விவாதிக்கப்படவும் இல்லை. அதேசமயம் யாரும் கருத்து தெரிவித்திருந்தால் அவர்கள் துரோகிகளாகவே தீர்க்கப்பட்டிருப்பார்கள். அவற்றை நோர்வேயின் பேச்சாளர்கள் பிரபாகரனுடன் பேசி, பாலசிங்கத்திற்கு சர்வதேச மட்டங்களின் சிந்தனைப் போக்குகளோடு சேர்ந்து



பயணிக்கக் கூடிய திறனும் நடைமுறைக்கேற்ற அறிவும் உண்டு, ஆனதால் ISGAயைநீங்கள் முன்னெடுக்க விரும்பினால் அவரைப் பழையபடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

**197. பிரபாகரன் இணங்கினாரா?**

இணங்க வேண்டியிருந்தது. ISGA தயாரித்தவர்களில் ஒருவரும் அதை முன்னெடுத்து, பேச்சுவார்த்தைகளில் முன்னின்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பின்னணியில் நின்றே செயற்பட்டார்கள். அவர்கள் வாழ்ந்த நாடுகள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ந்திருந்தால் விளையக் கூடிய தனிப்பட்ட பாதிப்புக்கள் என பல ஊரில் தங்கள் மூலம் தெரிவானவர்களுக்கோ, மற்ற நாட்டிலிருந்த புத்திஜீவிகளிடமோ தங்களது இருப்புக் கருதி இதனை வெளியிட விரும்பவில்லை. ஆகவே நோர்வேயின் புத்திமதிகளில் பாலசிங்கத்தை திரும்ப வன்னிக்கு வந்து பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தார்.

**198. பாலசிங்கம் கூட்டாட்சி (Federal) முறையில் தீர்வு நோக்கிப் போகலாம் என்று ஏற்றதில் பிரபாகரனுக்கு என்ன வருத்தம்?**

வருத்தம் என்பது சாதாரணம். இப்படி செய்து விட்டார் என்ற கோபம். அதற்கு மேல் ஏமாற்றி விட்டார் என்ற ஆத்திரம். இப்படி பல உணர்வுகள். மற்றது பிரபாகரன் அதனைத் தெரிந்து கொண்ட விதம்.

பிரபாகரன், இயக்கத்தின் கோட்பாடுகளுக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும், தான் என்றாவது தமிழ் ஈழம் என்ற கோரிக்கையில் இருந்து விலகிச் சென்றால் யாரும் உடனடியாக அந்த இடத்திலேயே தன்னை சுட்டுத் தள்ளலாம், எவருக்கும் அப்படி உரிமை உண்டு,அதை தன்னுடைய மெய்ப்பாதுகாப்பாளர்கள் எவரும் தடுக்கக் கூடாது என கட்டளையிட்டு இருந்தாராம். அப்படியான அவருக்கு பாலசிங்கம் செய்தது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

ஆனால் பாலசிங்கமோ அவர்களை இணைந்த நாள்களிலிருந்து, அரசியல் யதார்த்தங்களை எடுத்து சொல்லியும், மக்கள் போராட்டமான வடிவம் தோன்ற வேண்டும் என அறிவுறுத்தியும் வந்தார். விடுதலைப் புலிகள் ஓர் இராணுவக் கட்டமைப்பிலேயே வளர்ந்தமை இவ்விடயங்களைச் செய்யக் கஷ்டமாக இருந்தது. அவர்கள் காடுகளிலும் மறைவிடங்களிலேயும் வாழ்ந்தார்கள். அவர்கள் காட்டிலிருந்து அரசியல் செய்பவர்களாக இல்லாமல், நாட்டிற்குள் வந்து மக்களுடன் இணைந்த பொது அரசியல் செய்தபடி இராணுவக் கட்டமைப்பு பேண பாலசிங்கம் விரும்பினார். இந்தியா திம்பு மாநாட்டில் சொன்ன கருத்தாக்கங்களைக் கொண்டு தனித் தமிழ் ஈழம் அமைவது சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தை அவர் விளங்கப்படுத்தியும் பிரபாகரன் கேட்கத் தயாரில்லை. பார்க்கலாம் என்பதே வழமையான பதிலாக வந்தது. ஆனால் அவர்களது அரசியல் பரப்புரையிலும் விளக்க பதிப்புகளிலும் முன்னர் சொல்லப்பட்ட தனி சுதந்திர தமிழ் ஈழம் என்பது போய் “தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்” என்று உருப்பெற்றது. பலரிடம் கேள்விக்குறிகள், இது பற்றி தொங்கிக் கொண்டே இருந்தன. நாங்கள் என்ன கேட்கிறோம் என்பது புரியாமல் சுதந்திரத் தமிழ் ஈழம் என்பது முற்று முற்றான சுதந்திரமான ஒரு தனி நாட்டை Sovereign State குறிக்கும். ஆனால் “தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்” - என்பது முற்று முழுதான சுதந்திர தேசத்தையோ அல்லது இறைமையுள்ள நாட்டையோ குறிக்கவில்லை. இன்னுமொரு இறைமையுள்ள நாட்டிற்குள் ஒரு தாயகத்தையும் குறிக்கும்.

சுதந்திரமாக எனது அம்மா, தாயார் என்றால் அடுத்தது சின்னம்மா, சிறிய தாயார் இருவருக்கும் தாயுறவு, பாசம், பரிவு உண்டு. ஆனால் முன்னவரிடம்தான் எமக்கு தொப்புள் கொடி உறவு உண்டு. ஆனால் என்னவோ விடுதலைப் புலிகள் தங்கள் கோடுகளால் தம்மை வேற்றுமைப்படுத்தினர். அவற்றை அதே தாயகக் கோட்பாடுகளில் இருந்த ரெலோ, புளொட் போன்றவற்றிடம் இருந்து வேறுபடுத்தித் தாங்கள் தனித் தமிழீழம் நோக்கியே பயணிக்கிறோம் என்று புடம் போட்டு மெருகேற்றி சர்வதேசத்துக்கு தந்தவர் பாலசிங்கம். பிரபகாரனோ, தனது இராணுவக் கட்டமைப்பின் வெற்றிகளாலும், தோற்றங்களினாலும் ஒரு கட்டுப்பாடற்ற சுதந்திர போக்கிலேயே நடந்து மக்களையும் நடத்தினார்.

# நாடாளுமன்ற உரைக்கு நேரம் ஒதுக்கும் சிக்கல் குறித்து சித்தர், செல்வம் சபாநாயகரிடம் நேரில் பேச முயன்றனர்!

## 'காலைக்கதிர்' நாளிதழுக்கான மறுப்பில் மாவை வெளிப்படுத்தினார்



'காலைக்கதிர்' நாளிதழில் வெளியான தகவல்கள் சில குறித்து 'உண்மையற்ற பிரசாரம் தொடர்கிறது; பதிலளிக்க வேண்டிய பொறுப்பு' என்ற தலைப்பிட்டு ஒரு மறுப்பை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் திகதியிட்டு அனுப்பி வைத்துள்ளார். நேற்றுக் காலை நாளிதழ் அலுவலகத்தில் அது நேரில் ஒப்படைக்கப்பட்டது. அது அப்படியே வரிக்கு வரி இங்கு பிரசுரமாகின்றது.

தங்கள் 10.07.2021 வெளிவந்த பத்திரிகையில் 'இனி வருவது இரகசியமல்ல' தொடர் பந்தியில், மாவை சேனாதிராசா நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுடன் பேசியவை தொடர்பில் உண்மைக்கு மாறான செய்திக்கு மறுப்பு தெரிவிக்க வேண்டியுள்ளேன். பலரது வேண்டுகோளுக்கிணங்கவே இக் கடிதத்தை எழுதுகிறேன்

இதற்கு முன்னரும் பல உண்மைக்கு மாறான செய்திகளுக்கு பதிலளித்திருக்கிறேன். ஆனாலும் 29.05.2021 மற்றும் 30.05.2021 காலைக்கதிரில் மாவையின் வேணவா வீணவா ஆகும் தலைப்பில் வெளியிட்ட கட்டுக்கதைக்கு பொருத்தமான வேளையில் பொருத்தமான வகையில் பதிலளிப்பேன். அந்த துன்பியல் நிகழ்வின் ஐந்து ஆண்டுகளின் பின் 2014இல் கௌரி என்பவர்" எழுதிய உண்மைக்கு மாறான கட்டுக்கதைக்கு 2014 டிசெம்பரில் பதிலெழுதியுள்ளேன். இப்பொழுது, 30 ஆண்டுகளுக்குப் பின் அதே கதை இன்னும் திரிபுகளுடன் வெளிவந்திருக்கிறது. 14.12.2014 கதை எழுதிய உண்மைப் பதில் சென்ற சில வாரத்திற்கு முன், அண்மையில்தான் தேடி எடுத்துள்ளேன். தங்களுக்கும் தரலாம். அந்த உலகறிந்த உண்மைகள் தங்களுக்கும் நன்கு தெரியும்.

இப்பொழுது 10.07.2021 வெளிவந்த தங்கள் பத்திரிகைக் கதைக்கு வருகிறேன்

சென்ற 06.07.2021 மாலையிலும் அதற்கு முன் இரு தடவைகளிலும் திரு. சஜித் பிரேமதாசா கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மருத்துவமனைகளுக்குத் தலா 2.3 மில்லியன் ரூபா மருத்துவ உபகரணங்கள் கொழும்பிலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் கையளித்த வைபவத்திற்கு வருகைதருமாறு எனக்கும் அழைப்புக்கள் அனுப்பியுள்ளார். 05.07.2021 அன்று அவரிடமிருந்து வந்த செய்திகளுக்கு நான் யாழ்ப்பாணத்திலிருப்பதால் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் எமது கட்சிப் பா.உ களிடம் கூறி அனுப்பி வைக்க முயற்சிக்கிறேன் என்ற பொழுதுதான் திரு. சஜித் பிரேமதாசாவிடம் பேசிய ஒரு நிமிடச் செய்தி யென்னவெனில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் நேரத்தை எமது பா.உ களுக்கு அரை மணி நேரமாவது கூடுதலாக ஒதுக்க வேண்டும் என்பது மட்டும் தான். அவர் பதில், நான் அதுபற்றி கவனிக்கிறேன் என்பது மட்டும் தான்.

பாராளுமன்ற நடைமுறைகள் விவாதத்திற்கு நேரம் பகிர்ந்துகொள்ளும் முறை எனக்கும் நன்கு தெரியும். சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தான் ஆளும் கட்சிக்கு எவ்வளவு நேரம், எதிர்க் கட்சிக்கு எவ்வளவு நேரம் என ஒதுக்கப்படும். எதிர்க் கட்சி தலைமை தான் ஏனைய எதிர்க் கட்சிகளுக்கு நேரத்தை பங்கிடுவது வழமை. நேரம் போதாது என்றால் அவர்களிடம் தான் கேட்டுப்பெறுவது வழமை .

த.தே.கூட்டமைப்பின் தலைவர்களான திருவாளர்கள் சித்தார்த்தன் பா.உ, செல்வம் அடைக்கலநாதன் பா.உ, ஆகியோர் தங்களுக்குப் பாராளுமன்றில் பேசுவதற்கு அவகாசம், நேரம் கிடைப்பதில் பாகுபாடுள்ளதால் தாம் சபாநாயகரிடம் நேரடியாகப் பேசப் போவதாக நேரில் என்னிடம் தெரிவித்தனர். அவ்வாறு செய்ய வேண்டாம், நான் இதுபற்றி ஒழுங்கு செய்ய முயற்சிப்பதாகத் தெரிவித்திருந்தேன்." அதனால் தான் திரு. சஜித் பிரேமதாசவிடம் தொலைபேசியில் கிடைத்த சந்தர்ப்பத்தில் ஒரு நிமிடத்தில் பேசிவிட்டேன். எங்கள் தரப்பில் யாருடைய பெயரைக் கூட உச்சரிக்கவில்லை. திரு. லக்ஸ்மன் கிரியெல்லவிடம் சென்ற பாராளுமன்றக் காலத்தைவிட இன்றுவரையில் நேரிலோ, தொலைபேசியிலோ பேசியதேயில்லை. இது தான் உண்மை.

நான் திரு. லக்ஸ்மன் கிரியெல்லையுடன் பேசினேன் என்ற கட்டுக்கதையும், செய்தியும் அதைத் தொடர்ந்து 11.07.2021லும் வெளிவந்த செய்திகளும் குழப்பமான கருத்துக்களாகும். தங்களின் மேற்கண்டவாறு செய்திகள் பொய்யான செய்தி என 10.07.2021 மாலையில் திரு. சுமந்திரனிடம் நான் கூறியிருக்கிறேன்.

கொரோணா வைரஸ் தொற்றினால் மக்கள் உயிர்கள் பலியாகுவதும், மக்கள் துயரத்தில் வீழ்ந்து கிடப்பதுமான பெரும் துயரத்தில் இவ்வாறான பொய்கள் எனக்கு எதிராகவும், தமிழரசுக் கட்சியைச் சீர்குலைக்கவும் எடுக்கும் செய்திகளுக்குப் பதிலளிக்க வேண்டி வந்தமையையிட்டு மனம் வருந்துகிறேன்.

**ஆசிரியர் குறிப்பு**

1. 'காலைக்கதிர்' நாளிதழின் செய்திகள், தகவல்கள், கட்டுரைகளால் தாங்கள் முறையற்ற விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று யாரேனும் கருதி, மறுப்பு அனுப்பினால் – சட்டத்துக்கு அமைவாகவும், பத்திரிகை தர்மத்துக்கு ஏற்பவும் அவை அமைந்திருந்தால் – அவற்றை எந்தப் பின்னடிப்பும் இன்றி நாம் முழுமையாகத் தவறாது பிரசுரிப்பது வழமை.

அதனை சம்பந்தப்பட்டவருக்கு நாம் செய்யும் சகாயமாகக் கருதாமல் எமது தார்மீகக் கடப்பாடாகவே கருதி ஆற்றி வருகின்றோம். தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவின் மறுப்புகளுக்கும் கூட இடமளிக்கவும் மூலச் செய்தியினது அளவு முக்கியத்துவம் அளிக்கவும் நாம் பின்னின்றவர்கள் அல்லர். ஒன்றரை மாதத்துக்கு முன்னர் வந்த கட்டுரை தொடர்பாக, அதில் உள்ள விடயங்களுக்குத் தெளிவான – சுற்றி வளைக்காத – பதில் அவரிடமிருந்து வந்தால் நிச்சயம் அதுவும் உடன் பிரசுரமாகும் என்பதை அவருக்குத் தெரியப்படுத்துகிறோம்.

2. அவர் தமது மறுப்பில் குறிப்பிட்டமை போல அவர் பற்றிய தகவல் பிரசுரமான பத்தி 'இனி வருவது இரகசியமல்ல' – என்பதல்ல. 'இனி இது இரகசியம் அல்ல' என்பதுதான் அந்தப் பத்தி. மாவை சேனாதிராசாவின் இந்த மறுப்பு தொடர்பில் பத்தி வரைபவருக்கு ஏதேனும் தெளிவுபடுத்தல் இருக்குமானால் அது வழமைபோல அந்தப் பத்தியில் இடம்பெறும். (ஆ – ர்)

## கொரோனா தொற்றிய சிங்கம் பூரணமாகக் குணமடைந்தது

கொழும்பு, ஜூலை 15

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான சிங்கங்களில் ஒன்று தற்போது பூரண குணமடைந்துள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மற்றைய சிங்கமும் குணமடைந்து வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் ஏனைய விலங்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் எந்த விலங்குக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## செப்ரெம்பர் முதலாம் திகதி வரை ஹரின் கைது செய்யப்படமாட்டார்

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபர் நேற்று (புதன்கிழமை) உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாகத் தம்மை கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி ஹரின் பெர்னாண்டோ அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இயல்பு வாழ்வை மீட்டெடுக்கும் விதமான கொரோனா விழிப்புணர்வுச் சுவரொட்டிகள்

கொரோனாவைத் தடுக்க எங்கள் பங்களிப்பு என்ன?என்ற தலைப்பில் யாழில் கொரோனா விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியால், இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த 2 வாரங்களாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில், கொரோனா விழிப்புணர்வுச் சுவரொட்டிகளை இந்த கட்சி ஒட்டி வருகின்றது.

கொரோனாவைத் தடுக்க எங்கள் பங்களிப்பு என்ன? என்ற தலைப்பிலுள்ள இந்தச் சுவரொட்டியில் முகக் கவசத்தை முறையாக அணிவோம்,



தனிமனித இடைவெளியைச் சரியாகப் பேணுவோம், கைகளை நன்றாகச் சவர்க்காரமிட்டுக் கழுவுவோம், இயல்பு வாழ்வை மீட்போம் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறையில் உள்ள ரஞ்சனின் வீட்டை மீளப் பெற ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 15

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் உடைமைகள் அனைத்தும் நாடாளுமன்ற உறுப்பினருக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நீக்கப்படவுள்ளன.

வீடு ஒன்று கிடைக்கும் வரை ரஞ்சனின் உடைமைகளை அவருக்கு வழங்கப்பட்ட வீட்டில் வைப்பதற்கு அனுமதி வழங்குமாறு அவரது சட்டத்தரணி, அமைச்சர் லொஹான் ரத்வத்தேயிடம் இதற்கு முன்னர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய அமைச்சர் லொஹான் ரத்வத்தே, சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு 3 மாதங்களுக்கு அங்கு உடைமைகளை வைக்க அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

குறித்த 3 மாத காலப்பகுதி கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்துள்ளதாக நாடாளுமன்ற வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த விடயம் தொடர்பில் சபாநாயகருடன் எதிர்வரும் நாள்களில் கலந்துரையாடல் மேற்கொண்டு தீர்மானம் ஒன்று எடுக்கப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய உறுப்பினர்களுக்கு வீடு வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளமையினால், ரஞ்சனுக்கு வழங்கப்பட்ட வீட்டை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

வே.வரதசுந்தரம்

**பறவை உங்களிடம், இறகு என்வசம்**
**பாதங்கள் உங்களிடம் பாதை என்னிடம்**
**கண்கள் உங்களிடம் ரூபம் என்னிடம்**
**விடயம் உங்களிடம் கனவு என்னிடம்**
**உலகம் உங்களிடம் மோட்சம் என்னிடம்**
**இப்படிநாம் இணைந்தும் பிரிந்தும்**
**என்னுள் நீங்களும் நான் உங்களுள்ளும்**
**முடிவடைகின்றோம்!**

சாயிபாபா என்ற நாமத்தின் பொருள் பற்றிச் சிந்திப்போம். தெய்வீகத் தாய், தந்தை என்பதே அதன்பொருள். சாயிஅன்பின் வடிவம். அன்பே அவர் கருவி. அவர் எல்லா இதயங்களிலும் குடிகொண்டுள்ளார். இதயத்தைப் பரிசுத்தப்படுத்தி, பிரசாந்தி நிலையமாக்கிவிட்டால் சாயி அதனைத் தான் விரும்பி உறையும் இல்லமாக ஏற்றுக் கொள்வார். 'உங்கள் இதயமே எனக்குப் பிரசாந்தி நிலையம்' என்பார்.

மோதிரங்கள், அட்சரங்கள், கூடுகள், மற்றும் ஜெபமாலைகள் என்பவற்றை நானே வழங்குகிறேன்? வழங்கப்பட்டவருக்கும் எனக்கும் இடையேயுள்ள பந்தத்தை எடுத்துக் காட்டுவதற்காகவே அவை அளிக்கப்படுகின்றன. அவர்கட்கு ஏதேனும் இடர் ஏற்படும் பொழுது ஒரு நொடிப் பொழுதில் உரிய பாதுகாப்பு அவர்களிடத்தே சென்றடைகிறது. அவ்வாறு வழங்கப்படும் பொருள் அதனைப் பெற்ற சாயி அடியார்களுக்கு மட்டுமன்றி, என்னை எப்பெயர் சொல்லி அழைத்தாலும், எவ்வுருவில் வழிபட்டாலும் அவர்களுக்கு என்னருள் பொழிவேன். கருணையை வென்றெடுக்கும் பந்தம் அன்பேயாகும்.

– இவ்வாறு பகவான் பாபா சிந்தனையில்


சசிலேகா இராஜஜோதி தம்பதியர்


மூழ்கிய சாயிபக்தர்கள் ஒருசாயி தம்பதியர் அனுபவம் கேட்டின்புறுவர். திருகோணமலை மண்ணீன்ற சாயி பக்தர்களான கொழும்பு நகர்வாழ் சசிலேகா – இராஜஜோதிதம்பதியர்சாயிசேவையில் தம்மைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொழும்பு ஸ்ரீசத்தியசாயி பாபா நிலையத்தில் தொண்டுகள் செய்பவர்கள்.

சாயிபக்தை சசிலேகா இராஜஜோதி கொழும்பு ஸ்ரீசத்தியசாயி பாபா நிலைய மகளிர் அணியின் செயற்பாடுகளில் துடிதுடிப்புடன் ஈடுபடுவதை இன்று நேற்றல்ல, ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நேரில்கண்டு நானும் என் துணைவி வில்வராணியும் வியந்துள்ளோம். கொழும்பு வீதிகளில் அதிகாலைப் பொழுதில் நகரசங்கீர்த்தனம் நடைபெறும் வேளையில், பகவான்பாபா தேருலாப்போதில், பஜனை, பூசைகள், விழாக்கள் நடைபெறும்போது சசிலேகா – இராஜஜோதி தம்பதியர் பம்பரம்போல் சுழன்று சேவை யாற்றுவர். இத்தம்பதியர் தம் சாயி அனுபவம் கூறக்கேட்போம்:–

'நாங்கள் இருவரும் கொழும்பு கொட்டாச்சேனை – புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயிபாபா மத்திய நிலையத்தில், ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கும் மேலாக தொண்டர் சபையில் இணைந்து, அங்கு நடைபெறும் சேவைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

அத்துடன், அங்கு இடம்பெற்று வருகின்ற பாலாபிஷேகம், திருவிளக்கேற்றுதல், பாத பூஜை மற்றும் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை முதலான சமய அனுஷ்டானங்களிலும் பங்கேற்று வருவதுண்டு.

1975ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை சுமார் 25 ஆண்டுகள் இந்த சாயி ஸ்தாபனம், ஸ்தாபகத் தலைவர் எஸ்.டி. சிவநாயகம் ஐயாவின் வழிநடத்தலில் இயங்கிவந்தது. 2002 ஆம் ஆண்டில் ஸ்தாபகத் தலைவரின் மறைவுக்குப் பின்னர், அவரது தனயன் உதயநாயகன்




புதிய தலைவராக ஏகமனதாகத் தெரிவாகினார். அதனைத் தொடர்ந்து, இவரது தலைமையில் தற்போது இருபது வருடங்களாக இந்த சாயி ஸ்தாபனம் இயங்கி வருகின்றது

இந்த சாயி நிலையத்தின் அனுசரணையுடன் வருடா வருடம், புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்துக்கு நாம் புனித யாத்திரை மேற்கொள்வதுண்டு. இந்த யாத்திரையை சாயி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.டி. சிவநாயகம் அவர்கள்தான் ஏற்பாடு செய்வார். அந்த யாத்திரையில் ஏறத்தாழ 75 முதல் 100 வரையான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம். சிவநாயகம் ஐயாவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த யாத்திரைகளில், எமது சாயி நிலைய அங்கத்தினர்களும் பிரதான பங்கு கொண்டனர். இந்த யாத்திரைகளில் பங்குபற்ற, அப்போது எமக்கு பாக்கியம் கிடைக்கவில்லை. பொறுமை காத்து வந்தோம். 2007ஆம் ஆண்டில்தான் முதன்முதலில் புட்டபர்த்தி பிரசாந்தி நிலையம் செல்லும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

நாங்கள் இருவரும் எமக்குள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டோம். ‘‘அந்தக் காலத்தில் பகவான் பாபா பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால் தற்போது அற்புதங்களை நிகழ்த்துவதில்லை என்று, நம்மவர்கள் பேசிக் கொள்கிறார்களே! அப்படியானால் திருநீறு வரவழைத்துக் கொடுத்து, ஆசீர்வதிப்பது அல்லது தங்கச் சங்கிலி வரவழைத்து பக்தர்களின் கழுத்தில் அணிவித்து ஆசீர்வதிப்பது போன்றவற்றை நேரில் பார்க்கக் கிடைக்காதல்லவா?” என்று ஆதங்கப்பட்டோம்.

பிரசாந்தி நிலையத்தை சென்றடைந்த நாம், அன்று ஒரு வியாழக்கிழமை. மாலை தரிசனத்துக்காக மண்டபம் சென்றோம். அங்கு நடைபெற்ற பஜனைக் கூட்டு வழிபாட்டிலும் கலந்துகொண்டோம். அன்றைய நிகழ்வில், விஷேட அம்சமாக சங்கீத கச்சேரியும் இடம்பெற்றது. சங்கீத கச்சேரி முடிவுற்றதும் பாபாவின் பாத தரிசனத்துக்குச் சென்றார் அந்தப் பாடகி பாபா உடனே கையை அசைத்துத் தங்கச் சங்கிலி ஒன்றை



வரவழைத்து, பாடகியின் கழுத்தில் அணிவித்தார். அத்தோடு, திருநீற்றையும் வரவழைத்து, பாடகியின் கரங்களில் இட்டு ஆசீர்வதித்தார்.

இந்த நிகழ்வை நேரில் கண்ட நாம், அதிர்ச்சி அடைந்தோம். எமது கண்களை எம்மால் நம்பமுடியவில்லை. நாமெதனை எதிர்பார்த்து ஆவலுடன் சென்றோமோ, பாபா அதனை எங்களுக்கு நேரடியாகவே காட்டிவிட்டார். என்ன அற்புதம்!'

# கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்ட 3 லட்சம் பேரின் தரவுகளில் சிக்கல்



கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்ட 3 லட்சம் பேரின் தகவல்கள் தொடர்பிலான தரவுகளில் சிக்கல்கள் நிலவுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்று (புதன்கிழமை) ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும், முதல் தடுப்பூசித் திட்டத்தின் போது சுகாதாரத் துறையினரால் தரவுகளை சேகரித்த சந்தர்ப்பத்தில் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நேற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில்

இணைய வழிக் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகி ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தம் நேற்றும் (புதன்கிழமை) தொடர்ந்தது.

தங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடின் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் சேவை சங்கங்களின் தலைவர்களை பலவந்தமாக தனிமைப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 14 சங்கங்கள் இணைந்து இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பூரணமாக செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 18 வயதுக்குக் குறைந்த சிறார்களுக்கும் தடுப்பூசி



நாட்டில் 18 வயதுக்குக் குறைந்த சிறார்களுக்கும் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இதுதொடர்பான பரிந்துரைகள் எதுவும் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸார் என்று தெரிவித்து வத்தளையில் நகை கொள்ளை

வத்தளைப் பகுதியில் பொலிஸார் எனத் தெரிவித்து மக்களிடம் நகைகளை கொள்ளையடித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# அமரர் கேதீஸ்வரன் ஞாபகார்த்தமாக 50 குடும்பங்களுக்கு உலருணவுகள்



யாழ் மாவட்ட செயலக முன்னாள் திட்டமிடல் பணிப்பாளரும், தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முன்னாள் செயலாளருமாகிய அமரர் க.கேதீஸ்வரன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் 50 குடும்பங்களுக்கு நேற்று (புதன்கிழமை) உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இந்த உலருணவுப் பொதிகள் நுணாவில் சர்வ சாதனா சங்க சனசமூகத்தினூடாக குறைந்த வருமானமுடைய 50 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# கிளிநொச்சியில் தடுப்பூசி பெற்ற வைத்தியருக்கும் தொற்று உறுதி

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட வைத்தியர் ஒருவர் உட்பட 12 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களில் குறைந்திருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று திடீரென அதிகரித்துள்ளது.

மேற்படி தொற்றாளர்கள் அனைவரும், சமூகத்திலிருந்து தொற்றுக்குள்ளான வர்களாவர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டிருப்பினும், சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கொழும்புக்குப் பயணித்த இ.போ.ச. பஸ்கள் ஈரப்பெரியகுளத்தில் திருப்பியனுப்பப்பட்டன

யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியாவிலிருந்தும் கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான இரண்டுபஸ்கள் ஈரப்பெரிய குளம் சோதனைச் சாவடியுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அத்தியாவசிய தேவைகளின்றி பயணித் தவர்களை ஏற்றிச் சென்றதன் காரணமாக இரண்டு பஸ்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நடைமுறையில் உள்ளது. எனினும், அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் அத்தியாவசிய தேவை உடையவர்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க பஸ் மற்றும் ரயில் சேவைகளுக்கு நேற்று தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்டன வில் அனுமதியளிக்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பா ணம் மத்திய பஸ் நிலையத்திலி ருந்து நேற்று அதிகாலை 5.45 மணிக்கு இ.போ.ச. பஸ் ஒன்று கொழும்பு நோக்கிப் பயணித்தது.

அதேபோன்று வவுனியாவி லிருந்து நேற்று காலை மற்றொரு இ.போ.ச. பஸ் கொழும்பு நோக்கிப் பயணித்தது. இரண்டு பஸ்களும் வவுனியா ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் சோதனைக்கு உட்படுத்தியதில் பஸ்களில் பயணித்தவர்களில் பலர் தங்களுடைய அத்தியாவசிய தேவைகளை உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர்.

அதனால் அத்தியாவசிய தேவைகளின்றிய பயணிகளை ஏற்றிச் சென்றதாக இரண்டு பஸ்களும் ஈரப்பெரிய குளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகளில் பயணிப்போர் தமது கடமை அலு வலக அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்றும், மருத்துவ தேவைக ளுக்குப் பயணிப்போர் அது தொடர்பான ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதிச் சேவை ஊடாக வந்த

# 88 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

88 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள், சுங்கத் திணைக்களக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்தாலி மற்றும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பொதிச் சேவை ஊடாகக் கொண்டுவரப்பட்ட இரண்டு பொதிகளிலிருந்து குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை மற்றும் கொழும்பு 02 என்ற முகவரிகளுக்கு இந்தப் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து 534 கிராம் ஹசிஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சொக்கலேட், சப்பாத்து என்பவற்றுக்குள் மறைத்துவைத்து, குறித்த போதைப்பொருள்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் பேசாலை இளைஞர் கைது!

மன்னார் மாவட்டம், முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன் நகரில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 420 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக மோட்டார் சைக்கிள் ஒன் றைச் செலுத்தி வந்த நபரை வழிமறித்துச் சோதனையிட்ட பொலிஸார், ஐஸ் போதைப் பொருளுடன் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## வல்லை ஆதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் 32 பேரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று சென்று பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்துள்ளார். அவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்றுமுன்தினம் 9 பேருக்குத் தொற்றுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெரு பகுதி கொரோனாத் தொற்றுப் பரவலால் கடந்த சில நாள்களாக முடக்கப்பட்டுள்ளது. அங்கு நாள்தோறும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமை வடமராட்சியில் பெரும் கொத்தணி அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து வடமராட்சியில் எழுமாற்று கொரோனா பரிசோதனைகளை விஸ்தரிக்க சுகாதாரப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

## யாழ்ப்பாணம் உள்ளிட்ட 9 மாவட்டங்களில்

# 29 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கத்திலிருந்து விடுவிப்பு

ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்று காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். .அதனடிப்படையில் யாழ்ப்பாணம், கம்பஹா, பதுளை, நுவரெலியா, மட்டக்களப்பு, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 29 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மானிப்பாய் பொலிஸ் பிரிவின் கீழுள்ள சாவற்காடு கிராம சேவகர் பிரிவு விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று யாழ்.மாவட்டத்தின் யாழ்ணப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெக்லமேன் மேற்கு மற்றும் குருநகர் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவின் கீழுள்ள காரைநகர் கிராம சேவகர் பிரிவின் கள்ளித்தெரு மற்றும் கல்வந்தாழ்வு ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவின் புதிய காத்தான் குடி வடக்கு, புதிய காத்தான்குடி தெற்கு, கரபலா வீதி, ஏ.எல்.எஸ்.மாவத்தை, நூரனியாமயான வீதி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை முதலாம் குறுக்குத் தெரு மற்றும் பிறைந்துறைச் சேனை 2 ஆம் குறுக்குத் தெரு ஆகிய கிராம சேகவர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம், பதுளை மாவட்டத்தின் வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீலங்கபொல்ல கிராம சேகவர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் கினிகத்ஹேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா தோட்டத்தின் கடவள தோட்டப்பிரிவு மற்றும் கொத்மலை பொலிஸ் பிரிவின் பெரமன தெற்கு ஆகிய கிராம சேகவர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பொரள்ள 100 தோட்டமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் 15 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# ‘உயிர்ப்பு’ அமைப்பின் ஆதரவுடன் கோண்டாவிலில் நிவாரணப் பணி



(பூ.ராஜ்குமார்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களுக்கு கொவிட்-19 பேரிடர் தாக்கத்தினால் கற்றலில் ஏற்படும் தடங்கல்களை நிவர்த்தி செய்து கல்வியை ஊக்குவிக்கும் ஒரு வழிமுறையாக - இடைக்கால நிவாரணப் பணியாக - கோண்டாவில் கிழக்கு அபிவிருத்திச்சங்கம் (ஐக்கிய இராச்சியம்) ‘உயிர்ப்பு’ இன் ஆதரவுடன் முதல் கட்ட உலர் உணவு பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் மூன்று நாள்களாக இடம்பெற்ற நிகழ்வுகளின் போது யாழ்ப்பாண கல்வி வலயத்தின் உதவிக்கல்வி பணிப்பாளர் ப.சுரேந்திரன் உட்பட பல அரசாங்க அதிகாரிகளும் வி.மதிசங்கர் உட்பட பல பழைய மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையின் அதிபர் வி.இ ஹஸ்டரன்றோய் அளித்த செய்தியில் -

மாணவர்களின் கற்றல் நெறி முறைக்கு எதிராக உருவாகும் சவால்களுக்கு முகம் கொடுத்து அவர்களை கல்வியில் முதனிலைப் படுத்தவதே தனதும் ஒவ்வொரு ஆசிரியரினதும் இலட்சியம் என்று எடுத்துரைத்தார்.

பாடசாலையின் சகல துறை முனேற்றதுக்கும் தொடர்ச்சியாக ஆதரவு அளித்து வரும் கோண்டாவில் கிழக்கு அபிவிருத்திச் சங்கம் (ஐ.இ) ‘உயரிப்பு’ க்கும் பாடசாலை சமூகம் நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கரைச்சி பிரதேச சபை பெண் உறுப்பினர் ரி.ஐ.டி. விசாரணைக்கு இன்று அழைப்பு



கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான திருமதி விக்ரர் சாந்தி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பரந்தன் வட்டாரத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினரான இவர் மாவீரன் ஒருவரின் தாய் ஆவார்.

இன்று விசாரணைக்கு வருமாறு அவர் அழைக்கபட்டிருக்கின்றார். வரும்போது உடமைகளையும் எடுத்து வருமாறு அவர் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பூச்சாண்டிகளைப் புறந்தள்ளிவிட்டு மக்களுக்கான திட்டம் தொடரும்

## கௌதாரிமுனையில் டக்ளஸ் தெரிவிப்பு



பூச்சாண்டிகளால் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை தடுத்து நிறுத்த முடியாது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நியாயமான கருத்துக்கள் இருக்குமாயின் அவை பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கௌதாரிமுனையில் இலங்கை சீன கூட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு வளர்க்கும் நிலையத்தை நேற்று (புதன்கிழமை) பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு கருத்து வெளியிட்டுள்ள அவர் –

கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் எமது பிரதேச மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புக்களையும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில், ஆய்வு ரீதியாகப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள புரிதல் காரணமாக ஏராளமானோர் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த ஒன்றரை வருடங்களில் நூற்றுக்கணக்கான பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆயிரக்கணக்கான பண்ணைகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பண்ணைகளுக்கு லட்சக்கணக்கான கடலட்டை குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்து வளர்க்க வேண்டிய தேவையுள்ளது

இந்நிலையிலேயே, 2016, 2017 காலப் பகுதியில் அப்போதைய அரசாங்கத்திடம் அனுமதிகளைப் பெற்று, அரியாலையில் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தை அமைத்த இலங்கை சீனக் கூட்டு நிறுவனம், கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தை கௌதாரிமுனையில் அமைத்துள்ளனர். இதற்குத் தேவையான சட்ட ரீதியான அனுமதிகளை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை.

கடலட்டைப் பண்ணையைப் பொறுத்தவரையில் அவசியமான அனுமதிகளைப் பெற்றுச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியேற்படும்.

எனவே, நாரா – நக்டா – கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்று மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாது என அடையாளப்படுத்தப்படுகின்ற இடங்களில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு தழுவல் அடிப்படையிலான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, எமது மக்களின் பொருளாதார நலன்களையும் நாட்டுக்கான அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் கலந்துரையாடி இருக்கின்றேன்.

அண்மையில்கூட இந்தியத் தூதுவரைச் சந்தித்து எமது கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கோரியிருக்கின்றேன். அதேபோன்று முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் கோரியுள்ளேன்.

இவ்வாறான நிலையில்தான், கடந்த அரசால் நாட்டினுள் செயற்பட அனுமதி அளிக்கப்பட்ட குயிலான் நிறுவனம் கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தைக் கௌதாரி முனையில் அமைத்திருக்கின்றது.

இதுதொடர்பாக நேரடியாக நிலைமைகள் ஆராயப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கௌதாரிமுனை கடற்றொழிலாளர்களுடனும் கலந்துரையாடி எமது மக்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்பில்லாத தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

மேலும், கௌதாரிமுனை கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையம் தொடர்பாக அரசியல் நோக்கத்தோடு மக்களைக் குழப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான சுயநலப் பூச்சாண்டிகளால் என்னுடைய மக்கள் நலச் செயற்பாடுகளை தடுக்க முடியாது. மக்களுக்குத் தேவையானதையும் சரியானதையும் செய்வதற்கு எதிராக எத்தகைய எதிர்ப்புக்கள் ஏற்பட்டாலும் எதிர்கொள்ளத் தயங்கப் போவதில்லை. கடந்த காலங்களில் இவ்வாறான பல சலசலப்புக்களையும் சவாடல்களையும் எதிர்கொண்டு வெற்றி பெற்றமையை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். – எனவும் தெரிவித்துள்ளார்.






# தனிமைப்படுத்தல் விதி மீறல் 49 ஆயிரத்து 837 பேர் கைது

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 49 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிபொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

குறிப்பாக நேற்று (புதன்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 164 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவித்து பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருணாகல் மற்றும் வத்தள பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கைதானவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் மட்டக்களப்பு – கல்குடா பகுதியில் கைது செய்யப்பட்ட 10 பேர் தொடர்பான விண்ணப்பங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல் தலைமையிலான குழுவினர் விண்ணப்பங்களை முன்வைத்தனர்.

வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எம்.எச்.எம். பசீல் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும், சந்தேகநபர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க பொலிஸார் கால அவகாசம் கோரியுள்ளனர்.

அதற்கமைய, எதிர்வரும் 27ஆம் திகதி பொலிஸாரின் ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இதனிடையே, செவ்வாய்க்கிழமையும் சந்தேகநபர்கள் மன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை.

சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் வரை சந்தேகநபர்களின் விளக்கமறியல் உத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை, கல்குடா, கிரான் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மரபணு மாறிய 14 மாறுபாடுகள் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டன

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மரபணு மாறியதாக சந்தேகிக்கப்படும் 14 மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டன என சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் டெல்டா மாறுபாடு பரவிய பிரதேசத்தில் 25 பேரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளில் மரபணு மாறியதாக சந்தேகிக்கப்படும் 14 மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும் மரபணு மாறியதில் டெல்டா மாறுபாடு இல்லை என்றால் வேறு மாறுபாடு உள்ளதா என்பதை மரபணு வரிசை முறை பகுப்பாய்வு மூலம் மட்டுமே கண்டுபிடிக்க முடியும்.

இதுவரையில் இது தொடர்பிலான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவன்தர தெரிவித்துள்ளார்.

மரபணு மாறியதாக சந்தேகிக்கப்படும் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட கொழும்பு பிரதேசம் தொடர்பில் இதுவரையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தில் பரவும் மாறுபாடு வேறு பிரதேசத்தை நோக்கி பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2021 இல் வெளியிடப்பெற்றது.

## 49 ஆவது போட்டிக்குரிய பதில்கள்



481.4 கோல்கள்
482.பொன் விழா
483.7 கண்டங்கள்
484.வாழைக்குட்டி
485.அமெரிக்கா
486.காட்டுக்கோழி
487.68, 92
488.மு.க.ஸ்டாலின்
489.6 தடவை
490.மாஸ்டர்

## 13ஆம் திகதி வெளியான 49ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1.எம்.வர்ஷா - தெஹிவளை (9சரி)
2.ஏ.துஷான் - நீர்வேலி (10சரி)
3.எஸ். சதுர்ஜினி - அல்வாய் (9 சரி)
4.செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (10 சரி)
5. ஆர். மாலதி - உடுப்பிட்டி (8 சரி)
6.எச்.ரிஸ்மியா - தெல்தொட்டை (10 சரி)
7.பி.தனுஜா - நேரியகுளம் (10 சரி)
8.பி.ஸ்ருதி - மட்டக்களப்பு (10 சரி)
9.எம்.வர்ணபாலன் யாழ்ப்பாணம் (10 சரி)
10. எஸ்.துவாரகா - மட்டக்களப்பு (10சரி)
11. கே. அனுஷன் - ஏழாலை (10 சரி)
12. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (10சரி)
13.யு.ஜாமளை - கொழும்பு (7சரி)
14. கே.ஸ்ரீதரன் - கொழும்பு (8 சரி)

**பொதுஅறிவு வினாவிடைப் போட்டிகள் இனிவரும் நாள்களில் ஞாயிறுதோறும் பிரசுரமாகும்.**

# கின் கங்கையிலுள்ள குப்பைகளை அகற்றும் பணிகளில் கடற்படையினர்

கின் கங்கை அகலிய மற்றும் தொடங்கொட பாலங்களின் கீழ் நீர் வழிப்பாதையை தடை செய்யும் வகையில் தேங்கியுள்ள குப்பை கூளங்கள் கடற்படை வீரர்களால் அகற்றப்பட்டது.

கங்கையில் சாதாரணமாக பாயும் நீரால் காவிச் செல்லப்படும் குப்பை கூளங்கள் இந்த பாலங்களின் கீழ் தேக்கம் அடைகின்றன. இதனால் கின் கங்கையின் நீரோட்டம் தடைப் பட்டு அது சுற்றியுள்ள தாழ்நிலப் பகுதி களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வழி வகுக்கின்றது.

எனவே, உடனடி நடவடிக்கை களை ஆரம்பித்த தெற்கு கடற்படை கட்டளையகத்தின் சுழியோடி குழுக் கள், பாலங்களின் அடியில் தேங்கிய முற்றுகைகளை அகற்றியது.

வக்வெல்ல, அகலிய மற்றும் தொடங்கொடவில் அமைந்துள்ள சிறு பாலங்களுக்கு அடியில் சிக்கி யுள்ள குப்பைக் கூளங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் என்பனவற்றை அகற்றி நீரோட்டத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து கடலில் சங்கமமாக வழிவகுத்தனர்.




# ஹெரோயினுடன் குடு நோனி கைது

ஒரு தொகை ஹெரோயினுடன் குடு நோனி என அழைக்கப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

பொம்மை ஒன்றினுள் மறைத்து வைத்து குறித்த ஹெரோயினை அநுராதபுரத்திற்கு அனுப்ப முற்பட்ட போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனை யடுத்து கடுவலை பகுதியில் உள்ள அவரது வீட்டைச் சோதனையிட்டபோது அங்கிருந்த மேலும் 56 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

